அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி: 1, கதிர்: 33 | சென்னை திருவள்ளுவர் ஆண்டு. 1992, புரட்டாசி 27 வெள்ளி 13-10-61 | விலை 16 காசு

கழுகாக்கப்பட்ட கிளி!



காங்கிரசின் பேரு! நேரு பண்டிதர் வந்தார் நித்யானந்தத்துக்கு ஓட்டுப் போடுங்கள், ஆசிய ஜோதி வந்தார், ஆறுமுகத்தை மறந்துவிடாதீர்கள், சோவியத் கண்ட சோர்விலாத் தலைவர் பேசியதைக்கேட்டீர்களா சொக்கலிங்கத்தை அவசியம் தேர்ந்தெடுங்கள்; ஐயன் வந்தார், ஆகவே ஐந்தாண்டு திட்டத்தின் அநீதி பற்றி இனிமேல் பேசாதீர்கள், அவனிபோற்றும் அதிபர் உங்களைப்பார்த்து எப்படிச் சிரித்தார் பார்த்தீர்களா, சேலையில்லையே தின்னச் சோறில்லையே என்று முமுறுதீர்கள். கோடைக்கானல் போனார் — பொள்ளாச்சியைப் பார்த்தார்—புன்முறுவல் பூத்தார், போதாதா அது! புலம்பாதீர்கள் இனிமேல்—என்ன செய்தது இந்தக் காங்கிரசாட்சியென்று கேட்காதீர்கள், தமிழ்நாடே எப்போதும் உபசரிப்புக்குப்பேர்போனது என்று உலகப் புகழ்பெற்ற ஒப்பற்ற தலைவர் சொல்லிவிட்டார் உங்கள் மனதில் எதிர்க் கட்சிகளுக்கு இனிமேல் இடங் கொடுக்காதீர்கள், 'நானும்ஒரு தமிழன் என்று அவர் நவின்ற நேர்த்தியைக் கண்டீர்களல்லவோ இனிமேல் இந்தியை எதிர்க்காதீர்கள்; நாமெல்லாம் ஒன்று என்று அவர் பாசத்தோடு சொன்னதைக்கேட்டீர்களா மறந்துவிடாமல் காங்கிரசுக் காளைக்கே ஓட்டெல்லாம் போடுங்கள்!! எனறெல்லாம் விமர்சித்து நாடு முழுதும் பரபரப்பையும் பரவசத்தையும் உண்டு பண்ணி அதன்மூலம் தனக்கு 'மெருகு' தேடிக்கொள்ளப் படாத பாடு பட்டிருக்கிறார், இம்முறை காமராசர்.

ஆட்சி அவர் வசம் இருப்பதால் அனைத்தும் மிக மிக ஆடம்பரமாகவும் விளம்பரத்தோடும் செய்யப்பட்டிருக்கிறது! இதுவரையில்லாதஏற்பாடுகள் யாவும் இம்முறை எங்கும் செய்யப்பட்டிருக்கின்றன. தென்றல் நடனம், தேன்தேடும் வண்டின் நடனம், அன்ன நாட்டியம், அமுதக் கலச ஆட்டம், திரை நடிகர்களின் திறமைமிக்க நடிப்பு நாடகம், சினிமா இசைவாணர்களின் இனியகீதம், இப்படி எந்தெந்த வகைகளிலெல்லாம் திரட்ட முடியுமோ கூட்டத்தைஅந்தெந்த வகைகள் எல்லாம் அணுவளவும் வெட்கமின்றி ஆடம்பரமாகச் செய்யப்பட்டிருக்கிறது!

அன்பர் நேருவைக் காட்டி, அதன்மூலம் போதையூட்டிஆதரவைத்திரட்டி, அடுத்து வரும்தேர்தலிலே வெற்றிக்கொடியைக் காட்டிட வேண்டுமெனும் விருப்புடன் சென்னையில் சிங்காரமான பந்தலொன்று போட்டு பஞ்சாயத்துத் தலைவர்கள் எல்லாம், சிற்றூர்களிலிருந்தும் பேரூர்களிலிருந்தும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு வட்டாரத்திலிருந்தும் அந்தப் பஞ்சாயத்து உறுப்பினர்கள், 'பஸ்கள்' மூலமே சென்னைக்கு வரவேண்டுமென்றும் தக்கீது அனுப்பப்பட்டதாம்! சாப்பாடு இலவசம்—தங்க இடம் உண்டு—படுக்கக் கட்டிலுண்டு—பார்க்கலாம் சென்னையை—பண்டிதர் நேரு அறிமுகம் செய்து வைக்கப்படுவார்—என்றெல்லாம் எங்கும் பிரச்சாரம் செய்யப்பட்டு, பன்னிரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பஞ்சாயத்து உறுப்பினர்கள், அழைக்கப்பட்டிருக்கின்றனர் சென்னைக்கு! என்னங்க சௌகரியமா என்று இரவில் போய் ஒவ்வொருவரையும் விசாரித்தாராம் காமராசர்—எவ்வளவோ கிராமத்தார் 'மந்திரி'களையே பார்த்ததில்லை அமர்களுக்கெல்லாம் காமராசரின் உபசரிப்பும், கரம்குவித்து அவர்களைப் பண்டிதர் கும்பிட்ட சம்பவமும் கொஞ்சம் போதையூட்டுமன்றோ!! அதன் மூலம் ஓட்டுகளைக் குவித்துக் கொள்ளவும் நாளைக்குப்போய் உங்களைத்தான் நம்பியிருக்கிறேன் என்று அவர்களைக் கேட்கவும் பொதுவாகவே காங்கிரசென்றால் நாட்டில் வளர்ந்துள்ள எதிர்ப்பு உணர்ச்சியைக் குறைத்திடவும், காங்கிரசும் காமராசரும் நேருவின் பவனியை, நேத்ரானந்தக் காட்சியாக்கிட, பலவழிகளில், முயற்சித்திருக்கின்றனர்!

இன்றுகாங்கிரசுக்குள்ள கடைசித் 'துருப்புச் சீட்டு' நேரு அவர்கள்.

மாபெரும் கூட்டம் கூட வேண்டுமானால் மக்களிடம் தொடர்புகொள்ளவேண்டுமானால் நேரு வந்தால் போதும், என்று அவரது பெருமையைக் கூறுவதாகக்கருதிக்கொண்டு, அந்தோ பரிதாபம் தங்களைக் கண்டாலே மக்கள் 'சீந்தவில்லை—சினம் கொள்கிறார்கள்' என்கிற உண்மையை ஒளிவு மறைவின்றி, உலகுக்கு உணர்த்துகிறார்கள், தமிழ்நாட்டு கனம்கள்.

பவனி. பளபளப்பும், விறுவிறுப்பும் பூரிப்பும் நிரம்பிய விதத்திலேதான் இருந்திருக்கிறது—காணும் காங்கிரசார் தேர்தலுக்கு நல்ல விதை போட்டுவிட்டோமென்று குதூகலிக்கவும் கூடும்—நாலு நாளைக்கு, நாட்டு மக்கள் காங்கிரசின் பக்கம்தான் நிற்பர் என்கிற மனமயக்கம்கூட உண்டாகலாம்—ஆனால், இந்தப் பவனிகளாலும் படாடோபங்களாலும் போக்கிட முடியாத 'கசப்பு' மக்களிடம் இருக்கிறது.

பட்டம் பறிபோவதற்கு முன்னாளிரவுகூட மாமன்னர்கள் பலர் மகத்தான பவனிகளையும் மாதர்குல திலகங்களின் மரியாதைகளையும் பெற்றதாக நிகழ்ச்சிகள் உண்டு. மக்களாட்சிக் காலத்தில், இப்படிப்பட்ட உணர்ச்சி விழாக்கள் மூலமா, கசப்பைப் போக்கிட, இயலும்.

நாலு நாளைக்கு நேரு பண்டிதரைக் கண்டனர் மக்கள்—பிறகு வழக்கமாக அவர்கள் காண போவதென்ன? அகவிலையும் அல்லலும், பசியும் பிணியும் அவர்களை அருகே அழைத்தழுது, கேலிச் சிரிப்பொலி கிளப்பி, 'பேதாய்! பெரியதொரு விழா கண்டோம் என்று பேசிப் பூரித்துப் போகிறாயே! நேரு பண்டிதர் மிக மிக உயர்ந்தவர்தான்—உண்மை, உத்தமர் என்பதும் உண்மையே, உலகின் உச்சியில் இருக்கிறார் என்பதும் உண்மையே, அதைக் கண்ட நீ இருக்கும் இடம் எது என்பதை மறந்தாயே, நானல்லவோ எப்போதும் உன்னோடு இருக்கிறேன் நேரு பண்டிதரைக் கண்டதாலேயே, களிப்படைகிறாயே, எப்போதுமா அவர் உன்னோடு இருக்கப் போகிறார் அல்லது அவரைக் கண்டு களித்த உனக்கு அவர் உணவு உடை இருக்க இடம் ஆகியவைகளைக் குறைவின்றித் தரும் ஒரு வரம் தந்தா சென்றார், பழையபடி, உன்னை என்னிடம்

(6-ம் பக்கம் பார்க்க)

தி.மு.க. வார இதழ்

என்னருந்தோழீர்!

என் உல்ளத்தில் பற்பல ஆசைகள் உள்ளன. அவைகளில் ஒன்ருக 'பட விளக்கப் போட்டி'யினை வைத்தேன். அப்பப்ப! என் பாடு திண்டாட்டமாகிவிட்டது. மலர் வேலையைக் கவனிப்பதா, தின சரி வரும் இந்தக் கட்டுரைக் குவியல்களை எடுத்து வைப்பதா என்று என் அலுவலகத் தோழர்கள் திணறினர். இவ்வளவு சகோதர்கள் கலந்து கொள்வார்கள் என்று நான் எதிர்பார்க்கவே யில்லை. 'பட விளக்கப் போட்டி' என்று வந்த கடிதக் கற்றைகளைப் பிரிக்கவும், கழக மலர் காரணமாக இயலாமற் போயிற்று. எப்படியும் மலரில் வெளியிட வேண்டுமே யென்றெண்ணிப் பறந்தேன். என் துணை வியை இந்தப் பணிக்கும் பணித்தேன்...எல்லாக் கட்டுரைகளையும் செம்மைப் படுத்தித் தம்பி மாறனிடம் அனுப்பினேன்.

சமீபத்தில்தான் சாவின் கையிலிருந்து பிழைத்த 'முரசெரலி' மாறனுக்கு இவ்வளவு வேலையைத் தர என் மனம் ஒபபவில்லை. அறப்போர் மீது அன்புள்ள அத்தம்பி என் அன்புக் கட்டளையை மீற முடியாமல் தன் 'தீர்ப்பைக்' கொடுத்தார். சேலம் தோழர் இராசாராம், அண்ணு அவர்களுடன் சுற்றுப் பயணம் சென்றுவிட் டார்...முல்லை சத்திக்கும் ஓய்வில்லாத நிலை...அதனுலேயே 'முடிவை' மலரிலேயே போட முடியாமற் போயிற்று. மிகவும் வருந்துகிறேன்!

* * *

அநேகமாக வந்த கட்டுரைகள் யாவும் பெரியாரையும் சம்பத்தை யும் உறுதியாகக் குறிப்பிட்டிருக்கின்றன. சிலர் கார்டிலேயே எழுதி விட்டளர். ஒருசிலர் 'தந்தி' மூலமே விடையளித்தனர். ஆனுல் நான் எதிர்பார்த்தது, பெரியார்—சம்பத் போக்கு பற்றி!! ஆதாரங் களையும்—சான்றுகளையும் கொண்டமைந்த, கட்டுரைகளை!! அப்படிப் பட்டக் கட்டுரைகள் எதுவுமே வரவில்லை, அதனுல், அறிவித்த 50 ரூபாய்களையும், 'அடுத்படியாக' இருக்கும் கட்டுரைகளுக்கு பகிர்ந்தளிக்க முடிவு செய்தோம்.

பணம் வெள்ளிக்கிழமை மணியாடர் மூலம் அனுப்பப்பட்டு விட்டது.

அந்த முடிவின்படி கீழ்க்கண்ட பன்னிரெண்டு சகோதரர்களும் தலைக்கு 4 ரூபாய் 17 புதுக்காசுகள் வீதம் பரிசு பெறுகிருர்கள்.

(1) எம். எஸ். பாண்டியன், தில்லை நாயகபுரம் சந்து, மதுரை

(2) வி. சக்திவேலு, வடபாதி மங்கலம், தஞ்சை,

(3) எம். இராசாராம், காக்ஸ்டவுன், பெங்களூர்-5.

(4) ஏ. சந்திரா, அய்யங் கடைத்தெரு, தஞ்சை,

(5) கா. பெ. நாதன், ஆதனூர், சேலம்,

(6) பா. இளவழகன், கொரட்டூர், வில்லிவாக்கம் வழி

(7) உலகொளி, ஆதனூர். திருவையாறு.

(8) ப. இளவழகன், அன்பகம், பாஷியம் நகர், பெங்களூர் 21.

(9) புலவர் அருணு பொன்னுசாமி, தாத்தையங்கார் பேட்டை.

(10) க. து. வீ. பாண்டியன், திருவள்ளுவர் முன்னணிக் கழகம் சென்னை-5.

(11) இரா. பன்னீர்செல்வம், அரசினர் கல்லூரி, குடந்தை.

(12) க. அருணன், முத்தியாலுப்பேட்டை, புதுவை-3.

கவிஞரின் கர்வம்!

யூரிப்பிடீஸ் என்பவர் கிரேக்கத்தின் சிறந்த கவிஞர். ஒருநாள் அலீஸ்டிடெஸ் என்ற மற்ருெரு கவிஞர் யூரிப் பிடிசைச் சந்தித்து உரையாடிக்கொண்டிருந்தார். யூரிப்பிடீஸ் தான் எழுதிய கவிதையைப் பற்றி பேசியபொழுது மூன்று நாட்களில் மூன்று வரிதான் இயற்றினீரா? நான் இந்த மூன்று நாளில் முன்னூறு வரிகளுக்குமேல் எழுதிவிட்டேன், என்று கூறினுர்.

யூரிப்பிடீஸ் மிகவும் அமைதியுடன் ஆனுல் என்னுடைய மூன்று வரிகளும் முன்னூறு ஆண்டுகளுக்குமேல் நிலைத்திருக் கும். உன்னுடைய முன்னூறு வரிகள் மூன்று நாட்களுக்கு மேல் நிலைத்திருக்காது: என்று கூறி அலீஸ்டிடெசின் மண்டை கர்வத்தை அடக்கினுர்.

படவிளக்கப்போட்டி : முடிவு.

பரிசு பெருத சகோதரர்கள் 'அறப்போரை'க் காயமாட்டார்கள் என்று முழுதும் நம்புகிறேன். அவர்கள் எல்லோருடைய பெயரையும் எழுதச் சொன்னேன்—ஏட்டில் பிரசுரிப்பதற்காக! நான்கு பக்கங் களுக்குமேல் வரும் போலிருந்ததால் என்னுல் இயலவில்லை. ஏராள மான தோழர்கள் வாரந்தோறும் வழங்கிவரும் கவிதைகளைப் போட முடியாமல் கட்டிக் கட்டி வைத்திருக்கும் நிலையில் உள்ள நான்என்ன செய்ய முடியும்? அவர்கள் ஆர்வத்தையும் அறப்போரின்பால் கொண்டுள்ள பேரன்பையும் நான் பெரிதும் மதிக்கிறேன். அவர் களுடைய உடன்பிறப்பெனக் கருதி, என்னை மன்னிப்பார்களாக!!

* * *

(1) தேவங்குடி, பா. பக்தவத்சலம்.
(2) குடியாத்தம், கே. சாவித்திரி.
(3) கோவை, மு. பாண்டியன்.
(4) வேடசந்தூர், கு. அழகர்சாமி.
(5) முகவை, அன்பு முடி.
(6) அய்யம்பேட்டை, கே. பி. மொகிதீன்.
(7) மாவூர், மாமூலன்.
(8) பெங்களூர் சீராமபுரம், மு. காளிதாசன்.
(9) திருப்பத்தூர் தூயநெஞ்சக் கல்லூரி, வே. நாராயணன்.
(10) சென்னை, துளசிங்க முதலித்தெரு, ஜே. ஏகவள்ளி

முதலியோருடைய கட்டுரைகள் "பாராட்டுதலுக்குரியவை" என்று முடிவு செய்யப்பட்டன. "குருடும் குருடும்" என்ற தலைப்பில் "பிரெஞ்சுப் பெருவீரன் நெப்போலியன்..." என்று ஆரம்பமாகும் ஒரு கட்டுரையும் பாராட்டுதலுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதை எழுதிய தோழர் உடன் அவரது முகவரியைத் தெரிவிக்கக் கோருகிறேன். ஏனென்ருல் பாராட்டுதலுக்குரிய கட்டுரை தீட்டி யவர்களுக்கு அடுத்த இதழ் முதல் மூன்று மாதங்களுக்கு— 'அறப்போர்' இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

* * *

புதிய முயற்சிகளில் தவறுகளே இருக்காது என்று நான் வாதிட வில்லை என்ருலும் என் உடன் பிறப்புகள் பொருட்படுத்தாது 'அறப் போரை' வாழ்த்தும் என்று நம்புகிறேன். தொடர் கட்டுரைகள் இரண்டு வருவதோடு 'அப்பா'வின் 'இனமொழி கற்பீர்!' பாடமும் தொடர் கட்டுரைபோல அமைந்து விட்டதால்தொடர் கதையை உடன் ஆரம்பிக்கவில்லை! 'நாஜிசம்' நான்கு ஐந்துஇதழ்களில் முடிந்துவிடும்.

எல்லோருக்கும் மீண்டும் என் வணக்கங்கள்.

அன்பு,

நான் கண்ட அண்ணா

அரங்கண்ணல்

'விடுதலை'யில் பொருந்தாத் திருமணம் பற்றிய கட்டுரையைப் போட்ட அன்று, நடந்தது இது: வழக்கம் போல் என் அறைக்குச் சென்றேன். மாலை மணி ஐந்திருக்கும். தன் ஆபீசிலிருந்து வந்திருந்த தோழர் வாணன், அண்ணா தங்கியிருக்கும் இடத்துக்குப் போகக் கிளம்பிக்கொண்டிருந்தார். பத்திரிகையைப் பார்த்ததும், "என்ன சார்!" என்று வியந்தார். அதிகம் பேசாமல் அறிவையும் அன்பையும் வளர்க்கும் பண்புள்ள நண்பர் அவர். 'அண்ணாவிடம் போகிறேன்...வாறீங்களா!' என்றார். எல்லோரும் அந்தச்சமயம் அண்ணாவிடம் போய் அய்யா விஷயம் பற்றி வாதாடுவார்கள்—இரவெல்லாம் பேசுவார்கள். என் மனம் சரியில்லை—இனிமேல் எங்கே கழகம் உருப்பெறப்போகிறது என்கிற சஞ்சலம் — என்ன செய்யலாம் இனிமேல் என்ற வேதனை—இவைகளால், நான், எங்குமே செல்லவில்லை. வாணன் சென்ற கொஞ்ச நேரத்துக்கெல்லாம் காஞ்சித் தோழர் சுந்தரேசன் வந்தார். 'அண்ணா! உங்களை அழைத்துவரச் சொன்னார்...,' என்றார். 'அருமையான காரியம் செய்தாய்! அடடா, என்ன புத்தி சாலித்தனம்! இந்த யூகம் யாருக்கு வரும்?' என்று 'விடுதலை'ப் பத்திரிகையைப் பார்த்துவிட்டு, நம்மைப் பாராட்டத்தான் அண்ணா கூப்பிடுகிறார் என்றெண்ணினேன். என்னை அறியாமல் எனக்குக் கொஞ்சம் கர்வம் கூட வந்தது.

ஆனால், அண்ணா அதைப்பற்றி ஒன்றும் முதலில்—கேட்கவில்லை. அதனால், எப்போது கேட்பாரோ என்ன சொல்வாரோ என்கிற ஆர்வம் எனக்கு அதிகமாகிக் கொண்டேயிருந்தது. ஆனால் அண்ணா பேச்சு வாக்கில், 'இப்படிப்பட்ட காரியங்கள் எல்லாம் செய்வது தவறு. அய்யாவை எதிர்த்து நாம் ஒன்றும் போர் முழக்கம் செய்யவில்லை. அவரை நம் வழிக்குக் கொண்டுவர முயற்சிக்க வேண்டுமே ஒழிய, அவரை விட்டு நாம் போகும் முயற்சிகளில் ஈடுபடக் கூடாது," என்றார்.

என்னைக் குறித்தே அண்ணா சொல்கிறார் என்பது புரிந்தது. எனக்குக் கொஞ்சம் ஏமாற்றமாகத்தான் இருந்தது, இது! ஆனால் அவருடைய அந்தப் பெருந்தன்மை எனக்கு அவர் மீதிருந்த மரியாதையை இன்னும் அதிகமாக்கியது!

அரசியல் வாழ்வில் நமக்கு வேண்டாதவர்களுடைய மனதைப் புண்படுத்துவது நிமிட நேரத் திருப்தியை அளிக்க முடியுமே ஒழிய, மனித நெறியை வளர்க்காது என்பது அண்ணாவுடைய கோட்பாடாகும். இந்த உயர்ந்த மனநிலையை அவர் படித்த ஏடுகள் தந்திருக்கலாமா என்றால்—அண்ணாவைப் போல படித்த பலருக்குக்கூட இந்த மனநிலை இருப்பதில்லை. பிறகு எது இப்படிப்பட்ட மனவளத்தை உண்டாக்கியது என்று யோசிக்கும் போதுதான் அவரை 'அறிஞர்' எனச் சொல்லச் சொல்கிறது உள்ளம்!!

* * *

ஆபீசுக்குள் நுழைந்த அய்யா அவர்கள் நேராக நிர்வாக அறைக்குப் போய்விட்டார்கள். ஏதோ, என்னமோ நடக்கப்போகிறது என்கிற நிலையில் நிசப்தமாக இருந்தது அலுவலகம். நாங்கள் வழக்கமாக உட்காரும் இடம் நோக்கி நான் போயமர்ந்தேன். துரைராஜ் என்றொரு தோழர் 'புரூப்' திருத்துபவராக அங்கே பணியாற்றினார். எப்போதும் என்னைக் கண்டதும்நன்றாகப் பேசுகின்றவர் அன்று—பேசாமலிருந்தார். ஆசிரியர் குருசாமி அவர்கள் அய்யா உள்ளே போனதும், என்னிடம் வந்தார். 'என்ன இது! இந்த நிலையில் இந்தக் கட்டுரையை இப்படித் தலைப்பிட்டுப் போடலாமா! அய்யாவைக் காலையில் பார்த்தேன். எப்படித் திட்டினார் தெரியுமா?' என்றார்.

திசை திரும்பிவிட்டது என்பது புரிந்துவிட்டது! புத்தகங்கள் எல்லாவற்றையும்எடுத்துக்கொண்டு இனி இங்கே நமக்கெல்லாம் வேலை யில்லை என்று சொன்னவரா இப்படிப் பேசுகிறார் என்கிற ஆச்சரியம் வந்தது!!

'ஆபீசைவிட்டேப் போறதுன்னேமுடிவுசெஞ்சிட்டீங்களா'

'ஆமாங்க!'

'என்ன ஆமாம்?':

'இதோ என் விலகல் கடிதம்!' என்று, உள்ள சூழ்நிலைகளைப் பார்த்து, அங்கேயே உட்கார்ந்து எழுதிய விலகல் கடிதத்தை அவரிடம் நீட்டினேன்.

பெரியார் அவர்களுக்கு நான் எழுதியிருந்தேன். எண்ணற்ற இளைஞர்கள் உங்களுரை கேட்டுத் தத்தம் வாழ்வையே கொடுக்க இருக்கும் போது, நீங்கள் இப்படிச் செய்யலாமா என்கிற கருத்தையும் குறிப்பிட்டிருந்தேன்.

அண்ணன் குருசாமியிடமிருந்து, கடிதம் அய்யாவிடம் போயிற்று. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அய்யா கூப்பிடவே, நான் போய் நின்றேன். கோபமாக என்னைப் பார்த்தார்.

'வேலையிலிருந்து விலகவேண்டுமென்றால்—பதினைஞ்சு நாளைக்கு முன்னே நோட்டீஸ் கொடுக்கணும் தெரியுமா?' என்றார், அய்யா. தொழிலாளியிடம் முதலாளி கேட்பது போலிருந்தது!

'அந்த 'ரூல்'படி நாங்க உங்ககிட்டே வேலை செய்யலீங்களே!'—என்றேன். எனக்கு அழுகையும் கோபமும் வந்துவிட்டது. அய்யாவின் போக்கு—நம்மவர்களை நட்டாற்றில் விடும் நிலை—என்ன என்னவோ கொட்டினேன். வெளியே வந்துவிட்டேன். என்னை மீண்டும் அழைத்தார் அய்யா. 'சரி!சரி!...போய் இனிமேலாவது வேலையைப் பாருங்க...' என்றார். கோபம் மறைந்து நிதானமாகச் சொன்னார்!

நான் வெளியே வந்து ஆசிரிய அண்ணனிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினேன்!! அன்றைய தினமே பூ. கணேசன், கே. கோவிந்தசாமி, சங்கரய்யா முதலியோர் விலகிவிட்டதாகவும் தெரிந்தது. சம்பத் வரவேயில்லை. 'தினசரி' ஏட்டில், செய்தியாக இதெல்லாம் வந்தது. 'விடுதலை' அலுவலகத்திலிருந்து எனக்கு வரவேண்டிய சம்பளத்தில் பாக்கி ரூ 50 இருந்தது! அதற்காக மறு நாளும் போனேன். அடுத்த நாளும் போனேன். அய்யா கொடுத்துக் கணக்கைத் தீர்க்க

10-ம் பக்கம் பார்க்க)

சிதம்பரத்தில்!

பெரியார் அவர்களுக்கு ரூ 30,000 பெறுமானமுள்ள 'வான்'ஒன்றுநவீன வசதிகளுடன்வழங்கப்பட்டது.

ஃ ஃ ஃ

'என்னை விட்டுப்போன மகன் திரும்பிவந்துவிட்டான்' என்று அய்யாபேசினார்கள்.

'ஆமாம்! தந்தை சொல்லைத் தட்டிச் சென்றேன். தவறு என்றுணர்ந்து திரும்பிவிட்டேன்' என்று தோழர் சம்பத் பேசினார்.

ஃ ஃ ஃ

'எல்லாம் பணம் செய்கிற வேலை! சொத்து கிடைக்காது என்று மணியம்மா கலியாணத்தைக் கண்டதும் சம்பத் போனார் எதிர்த்தார் அப்படி எதிர்த்தவன் இப்போது உங்களிடம் வந்துவிட்டேன் என்று சொல்லி 'கிராக்கி'யைச் சம்பத் ஏற்றிக் கொண்டிருக்கிறார்...இது புரியவில்லையா? எல்லாம் பணமய்யா பணம்! சொத்தய்யா சொத்து!!—என்று மக்கள் பேசிக்கொண்டார்கள்.

ஃ ஃ ஃ

'அவன் திரும்பி வந்தது பற்றி நான் ஆச்சரியப்படவில்லை. ஆனால் நாணயமற்ற, ஒழுங்குக்கெட்ட அந்தக் கூட்டத்துடன் போய்ச் சேர்ந்திருந்துவந்தும் சம்பத் நாணயஸ்தனாக இருக்கிறான் என்பதுதான் ஆச்சரியம்'என்று அய்யாபேசினார்.

'ஆமாம்! திராவிட முன்னேற்றக் கழக இந்தி எதிர்ப்பு, நிதியைக் கணக்குக் காட்டாமல் எடுத்துக் கொண்டு வந்ததற்குப் பெயர்தான் அய்யா 'அகராதியில் 'நாணயம்' என்பது போலும்!' என்று மக்கள் பேசிக்கொண்டார்கள்.

நடிகவேள் எம். ஆர். ராதா 'நிந்தாஸ்துதி' என்பார்களே அதுபோல வெளுத்துக் கட்டிச் சரமாரியாகப் பேசினார்! அவர் பேசிவிட்டு, அய்யா பேச எழுந்ததும் கூட்டம் கலைய ஆரம்பித்தது!! ராதாவே எழுந்து எவ்வளவோ சொல்லியும் முடியவில்லை. (நு-நி)

பரிசுபெற்ற கட்டுரை 1

"துரோகி-ஒழியட்டும்; அவன் துரோகத்திற்குத் தகுந்த பரிசு!"

"ஐயோ வேண்டாம். கூப்பிடுங்கள்; தடுத்து நிறுத்துங்கள்!"

"தடுக்காதீர்கள்; போகட்டும். தடுத்தாலும் அவர்கள் கேட்க மாட்டார்கள்."

"கிழவனுக்குத்தான் மூளை குழம்பி விட்டது. அவனுக்காவது புத்தி வேண்டாமா?"

"இல்லை, இல்லை! கிழவனின் போக்கிலும் ஏதாவது தத்திரம் பொதிந்திருக்கும். பொறுத்திருங்கள் பார்ப்போம்."

"அந்தோ, பரிதாபம்! அவர்களின் வழியில் ஓர் பள்ளம், அதில் பதுங்கியிருந்து மீனைப் போல் பாவனை செய்து மூச்சுவிடுவது ஒரு முதலை! அது அவர்களுக்குத் தெரியவில்லை! பாவம் அநியாயமாக முதலைக்குப் பலியாகப் போகிறார்கள்."

"அது தெரியாமலில்லை. எல்லாம் அந்தப் பெரியவருக்குத் தெரியும். அவர் பழைய ஆளாயிற்றே! இந்தக் கடலுக்குள் என்ன—எப்படி இருக்கிறதென்பதெல்லாம் தெரியும். அப்படியே அது முதலையாயிருந்தாலும் அவர் தப்பித்துக் கொள்வார்."

"அதுமட்டுமல்ல! நம் கூட்டத்திலே ஒரு சாரார் அந்தமுதலையை குலதெய்வமாகக் கும்பிடுகிறார்கள்—கொண்டாடுகிறார்கள். மற்றவர்களுடைய ஆடு, மாடு,

எம். எஸ். பாண்டியன்

மதுரை

கோழி போன்றவைகளையும் மறைமுகமாக அதற்கு இரையாகப் போட்டு வளர்த்து வருகிறார்கள்! அவர்களும் இக்கிழவரும் மிகவும் நட்புரிமை கொண்டாடுகின்றனர். முதலை நன்றாக 'வாழ்க, வளர்க' என்கிறார் அக்கிழவரும்."

"அதனால் முதலை அவரை ஒன்றும் செய்யாதோ; மிகவும் பழகியது போலும்!—முட்டாள்களின் முகம் முன்னும் நடை பின்னுமாகத்தானிருக்கும்!"

"படித்த பட்டதாரிகளும் சில சமயம் முட்டாளைவிட மட்டமான காரியங்களைத் திட்டமாகச் செய்கிறார்கள்!"

கடலிலே இறங்கி மீன் பிடிப்பதற்குக் கையில் சிறு தூண்டில்களுடன் பள்ளத்தை நோக்கிச் செல்லும் இருவரைக்காணும் பல்வேறு மக்களின் குரல் ஒலிகளே மேலே தீட்டப்பட்டவை.

தென்கடாரோக் கரை! அத்திரைப்பகுதி மீனவர்களின் ஓர் உறைத்தொகுதி. அம்மீனவர்கள் தொழிற்துறையாலும் செயல் முறைத் தன்மையாலும் மாறுபட்டவர்கள், ஒன்றிணைந்த கருத்துடையவர்கள் மட்டும் ஒன்றுபட்டு மற்றவர்களிடமிருந்துமாறுபட்டதனித்தனிக்கூட்டங்களாகச் செயலாற்றுகின்றனர்.

அக்கூட்டங்களுள் ஒன்றின் தலைவர் ஒரு முதுபெருங் கிழவர். முதிர்ந்த வயதிற்கேற்பவும் சில உயர்ந்த பண்பிற்கேற்பவும் அக்கிழவரை அம்மீனவர்கள் 'பெரியார்' என்றே அழைக்கலாயினர். அப்பெரியார் சில உயர்ந்த பண்புகள் கொண்டோராயினும், காலப்போக்கில் பல தாழ்ந்த பிற்போக்கு மனங்கொண்டவராகவும் இழிந்த செயல்களில் விடாப்பிடியாக ஈடுபடுபவராகவும் திகழ்ந்தார்! அதன் காரணமாக அப்பெரியாரின் கூட்டத்தாரில் பலர், அவருடைய பிரதம சீடரும் பிரிபிரிந்து புதிய ஒரு கூட்டத்தை நிறுவி அவன் அதன் தலைவனெனவும்முழக்கிக்கொண்டான்.

தன் புதிய கூட்டத்துடன் தனித்தியங்க வழி—வகையறியாது தயங்கிய செல்வம், தான் முதலில் பிரிந்துவந்த அப்பெரியான் துணையையும், மற்ற மீனவக் கூட்டத் தலைவர்களையும் தயை வேண்டினான். தந்தையென்ற முறையில் அப்பெரியார் ஆதரித்தார்; மற்றவர் மறுத்தனர்—செல்வத்தின் குணமில்லாக் குறைவிற்கும், முறையில்லாத் துரோகத் தன்மைக்கும் வேறுவழியின்றி தந்தை வழி செல்வத் தயா யத்துக்குரியவருமான ஒருவரின் கீழ்பிரிந்துதனித்தியங்கினர். இவ்வாறு பிரிந்த மீனவர் முற்போக்குக் கூட்டத்தவர்களில் 'செல்வம்' என்ற பெயரைச் சுமந்து செல்லும் ஒருவன்—அப்பெரியாரின் தனயன்; அதாவது சகோதரரின் மைந்தன்.

'அண்ணா' என்ற பெயரைத் தாங்கி நின்றவரே, அப்புதிய மீனவ முற்போக்குக் குழாத்தின் தலைவர். அவர் அன்பில் அன்னை; அரவணைப்பில் தந்தை; அறிவில் வள்ளுவர்; ஈகையில் பாரி; எழுத்தில் சேரன்; சொல்லில் சோழன்; பண்பில் பாண்டியன்; அதுமட்டுமல்ல—அவர் தோற்றத்தில் குள்ளம்; ஆனால் பிறர் துயர் சரியாக்குன்றம்! அவர்பேச் செல்லாம் வெல்லம்; ஆனால், பிறர் ஏச்சைத் தள்ளுமவர் உள்ளம்! அவர் தம் குழுத் தோழர்களை தன் உடன் பிறந்த தம்பியெனச் சிறந்தே நம்பி வந்தார்! அத்தகைய அருங்குணங்களைக் கொண்ட தலைவனைப்பெற்ற அம்மீனவர் முற்போக்குக் குழாம், அமைதியாய்—ஆனால்அறிவாய்; நயமாய் ஆனால், நலமாய்—நாளொரு மேனியும்பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தோங்கி வந்தது தன் செயல்முறையென்ற தொழிற்றுறையில்.

முற்போக்குக் குழாத்தின் வளர்ச்சியும், அதன் தலைவரான தமையனின் புகழும் அத்தென் கரை மட்டுமின்றி வடகடலின் கரையோர மீனவர்க்கும் எட்டுவதாயிற்று; இது முன்பு அம்முது கிழவரின் கூட்டத்திலிருந்து பிரிந்து வந்திருந்த செல்வம் என்பானின் உள்ளத்தில் பொறாமையாக உருவாகியது! அதேசமயம் மற்ற மீனவக் கூட்டத்தினரும் செல்வத்திற்குத் தூபமிடவும், தூண்டுகோலிடவும், துணைநிற்கவும் செய்தனர்! அதன் காரணமாக அச்செல்வத்தைப் பதவிப் பித்தும், பணப் பைத்தியமும் அடிமைப் படுத்தின! எனவே முற்போக்குக் குழாத்தினாலும் அதன் தலைவராலுமே தன் வாழ்வு மகிழ்வடைந்தது என்பதைமறந்த செல்வம்தன்போன்றஒருசிலருடன் முற்போக்குக் குழாத்திடமிருந்து

ராகிவிட்டான் செல்வம்! அப்பெரியாருக்குச் செல்வம் அதிகம்; ஆனால் 'வாரிசு'இல்லை. அச்செல்வத்திற்காகவும் பதவிக்காகவுமே இச்செல்வம்ஒருதுரோகியாகமாறி விட்டானென்று அம்மீனவருள் அறிந்தவரும்தெரிந்தவரும்அறை கூவி இகழ்கின்றனர்! அது செல்வத்திற்குச் 'செவிடன் காதில் ஊதிய சங்கு!!

அப் பலரகப்பட்ட மீனவர் கூட்டங்களின் பெரும்பாலான பிரதான தொழில் மீன் பிடித்தலே. ஆனால் 'தமையன்' தலைமையில் இயங்கிவரும் மீனவர் முற்போக்குக் குழாத்தினரோ, முத்துக்குளித்தலையே முதன்மையாகக் கொண்டிருந்தனர். அத்துறைக்கு வேண்டிய 'நிறைமதி' சாதனங்களும் குறைவறப் பெற்றிருந்தனர், செல்வமும், அப்பெரியாரும் மற்றவர்களைப்போல் மீன் பிடிப்பதற்கே செல்கின்றனர்—அந் நீள்கடலின் ஓரக்கரையில் இறங்கி நடந்து!—அதுவும் சிறிய கைத் தூண்டில்களுடன்! பாவம் அவர்கள்!—இரு தனிப்பட்ட கூட்டங்களின் இரு தலைவர்களாயினும் தொழிற்செறிவுசிறிதுமில்லாததுமட்டுமின்றிதேவைக்கு ஒரு தோணியோ கட்டுமரமோ கூடக் கிட்டாதவர்கள்.

'என் வழியிலேயேவா;—பெரிய மீனைப் பிடிக்கலாம்! அதோ, அங்கே — தண்ணீருக்குமேல் குமிழ் வருகிறது பார்! அஃதென்ன தெரியுமா—அதுதான் உயரிய மீன்! வா நாம் போய் அதைப் பிடித்துவிடலாம். மற்றவர்களுக்கு தெரியாது. தெரிந்தாலும் முடியாது; முடிந்தாலும் கட்டுமரத்தையும் கயிற்று வலையையும் கட்டோடு தேடுவார்கள். அதிலும் என்னிடமிருந்து போன அந்த முற்போக்குப் பயல்கள் இருக்கிறான்களே!—அவன்கள் முத்துதான் குளிப்பான்கள், முட்டாள்கள்! நீ வா; நான் சொல்லுகிறேன்—வா என் வழியிலேயே' என்று அம்மீனவப் பெரியாரான கிழவர் முன் நடக்க, தனயனான செல்வம் பின்தொடர்கிறான்—ஆனாலும் சிறிது அச்சத்தோடு!

முத்துக் குளித்தலின்போது, இடையூறது இடையூறுசெய்துவரும் அக்கொடிய முதலையானது முற்போகுமீனவரால்பலமுறைஈட்டியாலும்தடியாலும்தாக்கபட்டுவெருட்டப்பட்டிருக்கிறது. அம்மூர்க்க முதலையைமுறியடித்துஅதனுறைவிடமானபள்ளத்தாக்கைத்தகர்த்தாலொழிய முத்தெடுப்பது சாத்தியமில்லையென்று அம்முற்போக்கினர் முழங்குகின்றனர்! மீனவப் பெரியார், செல்வம்— ஆகியஇருவரின் அபாயச் செயலுக்கு அஞ்சுகின்றனர். செல்வத்தின் துரோகத் தன்மையையும் மறந்து பிரிவிற்காக வருந்துகிறார்—முற்போக்குக் குழாத்தின் தலைவர்—'தமையன்!' மீனவருள் மாற்றுக் கூட்டத்தினர்செல்வத்தின் செயலுக்கு வாழ்த்துரைக்கின்றனர்; அவர்கள் அம்முதலையை

(9—ம் பக்கப் பார்க்க)

வாணி தமிழ்-இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல் இங்கிலீஷ்படிக்கவும் பேசவும் கடிதங்கள்எழுதவும்கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரியபைண்டு புத்தகம் விலை ரூ. 5வி.பி.பி.செலவுரூ.1-25

வாணி தமிழ், இந்தி சுபோதினி

தமிழைக் கொண்டு பிறர் உதவியின்றி சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக்கொள்ளலாம். விலை ரூ, 2-25 வி.பி.பி.செலவு 85 ந.பை.

ஐசுவரியம் (குடிசைக் கைத்தொழில்)

சோப், இங்கி, ஊதுபத்தி, வாசனைத்தைலம், ஸ்னோ. பேஸ் பவுடர், சாம்பிராணி போன்ற 200 கைத்தொழில்கள் கொண்டது. விலை ரூ, 4. வி. பி. பி. செலவு 85. ந. பை

குடும்ப இலகு வைத்தியம்

வீட்டு சரக்குகளைக் கொண்டு நோய்களைப் போக்கி, ஆரோக்கியம், பலம், ஆண்மை பெறுவது போன்ற அநேக வைத்திய ரகசியங்களடங்கியது. தபால் செலவோடு ரூ. 3-50

வாணி புக் டிபோ, 3, மலைய பெருமாள் தெரு,

(தபால் பெட்டி எண்: 239) சென்னை-1.

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி - 1 வெள்ளி 13-10-61 கதிர் - 33

"கொளுத்துக் குடிசையை!!"

கூடல் நகரத்திலே கூடினர்களல்லவா, கோமான்களும் சீமான்களும் சென்ற கிழமை! 'நாட்டை உய்விக்க நல்ல பல திட்டங்கள் தீட்டிக்காட்டியுள்ளோம் பாரீர் நாட்டினரே, உங்கள் ஓட்டுக்களை மட்டும் எங்களிடம் நீட்டுவீரே' என்ற பதம்பாடி, களிகூத்தாடிக் கலைந்தார் களல்லவா? அந்தத் திருக்கூடத்திலே கதாநாயகராகத் திகழ்ந்த குவலயம் போற்றும் 'கோமான்' அலகாபாத் பண்டிதர் ஆற்றிய உரையில் தெரிவித்த கருத்துக்களில் பளிச்சிட்டு மின்னும் அரிய பெரிய கருத்து, 'அற்புத யோசனை' அகிலத்துக்கே கிடைத்த 'வரப்பிரசாத மாகும்.

யாருக்கும் உதிக்காத—எவருமே இதுவரை சொல்லிடாத—சொல்ல துணியாத அந்தக் கருத்தை 'பஞ்சசீல போதகர்' நேருவைப் போன்ற மாமேதைகளால் மட்டுமே சொல்ல இயலும்! அதனாலேதான் அவர் சொன்னார்; அனைவரும் அதனைக்கேட்டு 'ஆகா, இவரன்றோ ஏழை எளிய மக்களுக்கு வாழ்வளிக்கவந்த வள்ளல்; ஏழை பங்காளர்; மகாத்மாவின் ஒரே வாரிசு'' என்று எண்ணியிருக்கக்கூடும்.

அந்த அரும்பெரும் கருத்தினைத்தான் என்னவென்பது? 'திரிபுர மெரித்த விரிசடைக் கடவுள்' ஆலவாயப்பன் திருநகருக்கு வந்ததும்' அலகபாத் வீரருக்கும் எரிக்கும் யோசனை தோன்றி விட்டது! ஆம், தீயிட்டு எரிப்பதுதான் அந்த யோசனை! எதை? எதற்காக?...

அரண்மனை போன்ற இல்லத்தில் ஐஸ்வர்யச் சீமான் வீட்டுப் பிள்ளையாகப் பிறந்து கோமகன்போல் வாழ்வு நடத்தக் 'கொடுத்து வைத்திருந்தும்' 'அடிமை நாட்டிலே அரச போக வாழ்வு இருந்தென்ன சுகம் எனக்கூறி ஏரவாடா சிறையில் ஏழாண்டு, அலிப்பூர் சிறையில் ஆறுண்டு என்று கழித்தவரல்லவா நேரு; ஏழை எளியோரின் துயர் எப்படி இருக்கும் என்பதைத்தாம் அனுபவிக்காவிட்டாலும் கேட்டுத் தெரிந்து கொண்டிருப்பரல்லவா? அதனாலேதான் சொன்னார். குடிசை வாழ் மக்களின் அவல நிலைபோக்க அருமருந்தன்ன அந்த யோசனையை!

> "குடிசை வாழ் மக்களின் வாழ்க்கைநிலை உயர வேண்டும்! அப்படியானால் நாட்டிலே குடிசையே இல்லாமல் செய்ய வேண்டும்'' என்றார் அந்த குணாளர்!

ஆகா அருமையான கருத்து; அவசியமான திட்டம் என்று இதை எல்லோரும் வரவேற்றிருப்பர் என்பதில் ஐயமில்லை.

> அடுத்து அவர், "குடிசைகளை ஒழிக்க ஒரே மார்க்கம் தான் உண்டு; அதை துணிந்து கையாள வேண்டும்'' என்றார்.

அனைவரும் என்ன அந்த அரிய மார்க்கம் என்றறிய ஆவலுற்ற னர். அவர் சொன்னார்:

> "குடிசைகள் அனைத்தையும் தியிட்டுக் கொளுத்திவிட வேண்டும்; இதில் தயக்கம் காட்டக்கூடாது''

நல்ல மார்க்கம்தான்! ஆனால் குடிசைகளைத் திக்கிரையாக்கிவிட்டு குடிசைவாழ் மக்களெல்லாம் எங்கே குடியேறுவர்? இந்தக் கேள்வி யையும் அவரே கேட்டுப் பதிலும் சொல்லியிருக்கிறார்!

> "சிறிது காலத்திற்கு வெட்டவெளியில் வசித்தாலும் பரவாயில்லை. குடிசைகளைக் கொளுத்தி விடுவதே நல்லது. குடிசைகளில் வாழ்வதைவிட வெட்டவெளியில் வானமே கூரையாகக் கொண்டு வாழ்வது உடலுக்கு ஆரோக்கியத் தைக் கொடுக்கும்.''

இதுதான் அவருடைய பதில்!

குடிசையே கூடாது என்பது நல்ல நோக்கம்தான்! குடிசையை உடனடியாக ஒழிக்க ஒரேவழி தீயிட்டுக் கொளுத்துவது என்பதுகூட அந்த நலல நோக்கத்தை நிறைவேற்றுவதில் நேருவுக்கு உள்ள அக்கறையைக் காட்டுகிறது என்று சொல்லலாம். குடிசை வாழ் வோருக்கு மாற்று வசதி இதுதான் என்று ஒன்றைக் காட்டுகிறாரே தலைமையமைச்சர் அதைம்பற்றி இந்த நாட்டு மக்கள் என்ன நினைப்பார்கள் என்பதுகூட ஒருபுறமிருக்கட்டும்—வெளிநாட்டுக் காரர்கள் என்ன நினைப்பார்கள் என்பதைக்கூட பார்புகழ் பண்டிதர் எண்ணிப் பார்த்தாரா என்பதுதான் நமக்குப் புரியவில்லை!

குடிசை ஒழிய வேண்டியதுதான். அதை ஒழிப்பது என்பதன் பொருள் என்ன? குடிசையையும் விட்டு விட்டு மரத்தடிவாழ்வு நடத்த மக்களை விரட்டியடிப்பதா? இதுதான் 'சுயராஜ்யம்' பெற்றுப் பதினன் காண்டு ஆட்சிக்குபபின் பண்டிதர் கூறும் 'நல்வாழ்வுத் திட்டமா?

'மூடடைப் பூச்சிக்கு அஞ்சி வீட்டைக் கொளுத்துவதா?' என்று நமது தமிழ்நாட்டில் ஓர் பழமொழி உண்டே! இதை பக்கத்திலே இருந்த காமராசர் கூறுவிட்டாலும் பக்தவத்சலமாவது பண்டிதருக்குக் கூறியிருக்கலாமே!

குடிசையைக் கொளுத்துவது என்பது ஒன்றும் கடினமான காரியமோ, பணச் செலவுள்ளதோ அல்ல. ஒரே ஒரு நெருப்புக் குச்சிதான் தேவை—சிறு பிள்ளையிடம் அந்த வேலையை விட்டு விட்டால் போதும்! ஆனால் அந்த அழிப்பு வேலை மற்றொரு ஆக்க வேலைக்கு வழிகோலுமா? இதற்குஉத்திரவாதம் தருவாரா தலைமை யமைச்சர் பெருந்தகை! திடலைக் காட்டுகிறார், சென்று வசியுங்கள் என்று! என்ன தாராளம்!

இனி அழுக்காக உடை தரிக்கும் ஏழை' அன்றுடங காய்ச்சி' களைப் பார்த்து இந்த அருவருப்புக் காட்சியை ஒழிக்க வேண்டும் என்று கருதினால் உடனே இத்தகையவர்கள் தங்கள் இடுப்பிலுள்ள கந்தலையும் அவிழ்த்து எறிந்து விடவேண்டும் என்று நேரு பண்டிதர் சொன்னாலும் வியப்பில்லை'' "ஏனெனில் அழுக்குப் பிடித்த கந்தல் அரையாடையை அணிந்து நோய்க்கு இடம் கொடுப்பதைவிட 'அம் மணமாக' இருந்தால் சூரிய ஒளி உடல் முழுதும் பட்டு ஆரோக்கிய மாக வாழலாம்'' என்று அவர் அருமையான யோசனை கூறக் கூடும்!

குடிசையைக் கொளுத்திவிட்டால் பிறகு அவர்களுக்கெல்லாம் வீடுகட்டித் தருவது எத்தனையாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்? நேரு சொன்னாரா? எந்தத் தைரியத்தில் குடிசை கொளுத்துவது?

மதுவருந்தக் கூடாது என்று மகாத்மா சொன்னார்; மக்களும் அதை வரவேற்றார்கள் என்பதற்காக மதுவை ஒழித்தார்களே, உடன் மது விற்கும் தொழிலாளர்கட்கு மாற்று வசதி செய்தளந்தார்களா? இன்றளவும் அவர்களில் பலர் வீதியிலே நிற்கிறார்களே 'விதி'யை நொந்துகொண்டு!

'மனிதனை மனிதன் இழுப்பது அவமானம்' என்ற மனிதாபி மானக் கருத்துடன் ரிக்ஷாவை ஒழிக்கப் போவதாகச் சொல்லி தமிழ்நாட்டில் படிப்படியாகக் குறைக்கும் திட்டத்தையும் மேற் கொண்டுளளனர். அதனால் வேலையிழக்கும் தொழிலாளர்கட்கு இன்றுவரை ஏதேனும் மாற்று திட்டம் 'அறிவிக்கப்பட்டதா?

அடித்தளமிடாமல் வீடுகட்டுவது போல் சுவர் இல்லாமல் சித்திரம் எழுதுவதுபோல் மாற்று வசதி இல்லாமல் இருக்கும் ஒரு வசதியை ஒழிக்க முனைவது அறிவுடைமைக்குகந்ததல்ல. இதை அறியாதவாகளல்ல ஆட்சியிலிருப்பவர்கள்! அறிந்திருந்தும் இதைச் செய்வானேன்? அதுதான் காங்கிரசாட்சியின் தனி மகத்துவம்!

—0— —0—

இராமநாதபுரம் மாவட்ட
திராவிடர் மாணவர் முன்னேற்றக் கழக

முதல் மாநாடு

22—10—61 ஞாயிறு காலை 8 மணிமுதல் இரவு 10மணிவரை விருதுநகர் "அண்ணல் கலையரங்கில்'' நடைபெறும்.

திறப்பாளர்: எம். மைனர் மோசசு பி.ஏ.பி.எல்.

தலைவர்: கா. சுப்பிரமணியம் பி.ஏ.பி.எல். பொதுச்செயலாளர் எஸ்.டி. சோமசுந்தரம் பி.இ.

அவர்களும்மற்றும் 50க்கும் மேற்பட்ட மாணவர்களும் பேசுவார்கள்.

இரவு—இசை நாடகம் உண்டு.

அ. வில்லவன்
மு. செ. குமாரசாமி
சேறை. இளஞ்செழியன்
செயலாளர்கள்.

ச. அமுதன்
வரவேற்புக்குழுத்தலைவர்

த. திருவரையன்
பொருளாளர்.

அறப்போர்

(1—ம் பக்கத் தொடர்ச்சி)

தானே ஒப்படைத்திருக்கிறார். வா, வா'' என்றுதானே பசியும் பட்டினியும் பஞ்சமும் வறுமை மையும் பாமரனை அழைக்கும்!!

வந்தார்! வரப்பிரசாதம் தந்தார்! சென்றன வறுமைகள்! தேய்ந்தன குறைகள்!—என்றுச் செப்பிட இயலும்?

கழனியில் பாடுபடும் காத்தான் கால் மூட்டை நெல்லை விற்று விட்டு மனைவி மக்களை அழைத்துக் கொண்டு பங்குனி உத்திரத்துக்கும் சித்திரா பௌர்ணமிக்கும் செல்கிறான்! குடை ராட்டினம்—ரவா உருண்டை—பட்டாணிக்கடலை—அலகுக் காவடி—அபிடேக விசேஷம்—இவைகளைக் கண்டும் உண்டும் களிக்கிறான்!! அதனால் என்ன? அவன், வீட்டுக்கு வந்த பிறகும் பெறமுடிகிறதா அந்தக் களிப்பை! அடா பயலே—என்னடா திமிர்—எங்கேடா போனே—என்றன்றோ ஆண்டை மிரட்டுவார்!!

அதேபோல, நேருவை அழைத்து வந்து, கண்ணுக்கு விருந்தாக்குவதால், பயனும் பலனும் பெறுவதென்பது, காங்கிரசு காமராசரின், சர்க்கஸ் வித்தையாகுமே தவிர, அவர் வந்தார், இது கிடைத்தது, அது கிடைக்கப்போகிறது, என்று சொல்ல முடியுமா காமராசரால்.

நம்முடைய மேயராவது, நேருவை வரவேற்றபோது, சென்னையின் குறைகளைச் சொல்லி அதற்கு வேண்டிய நிதி உதவியைக் குறிப்பிட்டுக் குறை பட்டார்! எந்த மந்திரிகளாவது இங்கே இதைச் செய்யவேண்டும்—ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்தனை ரூபாய்கள் அதிகமாக அளிக்கப்படுதல் வேண்டும்—அதோ பாருங்கள், இவ்வளவு அழகான நகரத்தில் நரகம் போலிருக்கும் குடிசை வாழ் பகுதிகளை அதற்கெல்லாம் பணம் வேண்டும், என்று கேட்டனரோ!!

காட்சி கண்காட்சியாக யிருந்தாலும், காரியவாதிக்குத் தன் காரியத்தின மீதுதான் கண்ணிருக்கும்.

காமராசருக்கு, 'காரியம்' என்பது தேர்தலாக இருக்கிறதே ஒழிய, அதற்கு நேருவின் விஜயத்தை எப்படிப் பயன் படுத்தலாம் என்கிற எண்ணம் வருகிறதே ஒழிய, நாட்டின் குறைகளை நாலு இடத்துக்கும் வந்த 'நம்ம' நேருவிடம் சொல்வோம் என்கிற எண்ணம், ஒரு துளியேனும் வந்ததா!!

துருவித் துருவித் தேடினேன்—எங்காவது ஒரு சொல்—காமராசர் சொல்லாவிட்டாலும் சுப்பிரமணியம்—அவரில்லாவிட்டாலும் பக்தவத்சலம் சொன்னாரா என்று.

அவரவரும், நேருவின் வருகையைக் கண்டு ரசிக்கக்கூடியக் கூட்டத்தை வைத்து, தி. மு, க. வை எப்படி யெப்படித் திட்டலாம் என்றே பேசியிருக்கின்றனர்.

தி. மு. க. வை நாம் திட்டினால் கூட்டம் கூடுவதில்லை—நேருவை அழைத்து வந்து, அவரை விட்டுத் திட்டச் சொல்வோம்—அவர் முன்னிலையில் நாமும் திட்டுவோம் என்று திட்டமிட்டு, இத்தடவை நேருவின் வருகை பயன் படுத்தப் பட்டிருக்கிறது.

நேருவும், நாம் அழைக்கப்பட்டது இதற்காகத்தான் போலும் எனக் கருதி, அழைத்தவர்களுக்கு உற்சாக மூட்டும் வகையில் அவர் சொல்லக்கூடாததைகூடச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்!

பண்டித நேரு, இன்றைய உலகிலுள்ள ஒப்பற்ற தலைவர்களில் ஒருவர்—நாம் மறுக்கமாட்டோம். உன்னதமான தியாகங்களைச் செய்த உத்தமர்—என்றும் நமக்கு அவரிடம் மரியாதை உண்டு. அவரை நாம் கண்டு களிக்க விரும்புகிற வரிசை வேறு! உத்தமர் காந்தியின் அடுத்த இடத்திலே வைத்து அவரைக் காண ஆசைப்படுகிறோம்—ஆனால், அவர், நம்முடைய காமராசருக்குப் பக்கத்தில்தான்வந்து நிற்கிறார்!!

பாருக்கெல்லாம் பஞ்சசீலம் போதிக்கிறார் நேரு. பஞ்சசீலம் என்றால் அன்புகொள்! அடுத்தவனை மதி! பொறுமை வேண்டும்! பூணுக அகிம்சை! ஒப்புரவோடு வாழ்!! என்பதாகும்.

புத்தர் போதித்த இந்த உத்தம நெறியினை உலகின் முன்வைக்கும் பண்டித நேரு அவர்களைப் பார்க்கும்போது பாராட்டவே, மனம்வரும்.

'உலகுக்குத்தான் பஞ்சசீலம்; உனக்கல்ல,' என்கிறவகையில் இங்குவந்து அவர் பேசியிருக்கிறார்! எப்பேற்பட்ட ஆள், எப்படிப்பட்ட வார்த்தையினைப் பேசுகிறார் என்கிற வேதனையே நம்மைத் தாக்குகிறது!!

தடைபல தாண்டுவேன்! படைபல செலுத்துவேன்! உள்நாட்டுப் போர் என்றாலும் கவலைப்படேன்!!—என்று திருமதுரையில் தனது செவ்வாய் திறந்து செப்பியிருக்கிறார் நேரு.

தீவிலேபோய் தவிக்கும் சியாங்கேஷேக் பேசவேண்டிய வார்த்தையை சீலர் எனப் போற்றப் படும்நேருவா, பேசுவது! போர்ச் சுகல் நாட்டுச் சர்வாதிகாரி சலாசரின் வாயிலிருந்து புறப்பட வேண்டிய சொல் மக்களிடம் புன்னகவராளி பாடிடும் இப்புனிதர்உதடுகளிலிருந்தா வரவேண்டும்! ஹிட்லர் பேசலாம்—அவனுக்கு அணு ஆயுதங்கள் மீதுதான் நம்பிக்கை. முசோலினி பேசலாம்—தெருவீதியில் நிறுத்தப்பட்டுச் சுட்டுவீழ்த்தப்பட்ட அந்தப் பாசிச வெறியன், எதையும் துருப்புகளைக் கொண்டு சாதித்துவிடலாம் என்றுஎண்ணியிருந்தான். ஜார் பேசினால் பொருளுண்டு! நேருவா, பேசுவது!!

"உள்நாட்டுப் போரே வந்தாலும் சரி, நான் ஒருபோதும் நாட்டுப் பிரிவினைக்குச் சம்மதிக்கமாட்டேன்'' என்று கர்ச்சித்திருக்கிறார் நேரு! கனம்கள் உள்பட அனைவருமே மதுரையில் கைதட்டி ஆரவாரம் செய்தனராம்!!

ஐயாசாமி! நாங்கள் உள்நாட்டுப் போர் துவக்கும்போது நீர் படைதிரட்டிப் பாய்வது இருக்கட்டும் — காஷ்மீர் என்னவாயிற்று? எல்லையைச் சுரண்டும் சீனாவிடம் உம்மால் என்னசெய்ய முடிந்தது? உமது இராணுவ அதிகாரியான பட்டாச்சாரியாவைப் பிடித்து வைத்திருக்கும் பாகிஸ்தானை என்ன செய்ய முடிந்தது? இதெல்லாம்கூட இருக்கட்டும், அசாம்மலைப் பிரதேசத்தில் இன்னும் நாகர்கள் உங்களுடன்உள்நாட்டுப் போர்தானே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். என்ன செய்து கிழித்தீர்? என்னமோ மாபெரும் படையெடுப்புகளை எடுத்து கடாரத்தையும் சிங்களத்தையும் கிடு கிடுக்க வைத்த வீரரைப் போல் பேசுகிறீரே? உமதுவண்டவாளம் தான் சிரிப்பாய்ச் சிரிக்கிறதே!! உலகெங்கும்! உமது வீரமும் சூரமும் தெரியாதா!!—என்று நாம் கேட்க முடியும்.

அப்படியே உள்நாட்டுப்போர் துவக்கினாலும், என்ன நடக்கும்? இந்திய இராணுவத்திலிருப்போரெல்லாம் பண்டித நேருவின் பங்காளிகளா! விஜயலட்சுமிதேவி யாரா லெப்டினன்ட்கர்னல்—இந்திராதேவியா மேஜர்—இல்லையே! அங்கு இருக்கிறார்களே, தென்னாட்டு மக்கள்!! ஆபிரிகக் கண்டத்திலேயுள்ள காங்கோவில் படைநடத்திச் சென்றிருக்கும் தளபதி ராஜா போன்றவர்கள்—அங்கேயில்லையா-அவர்களையெல்லாம் சுடச் சொல்லும்போது என்ன நடக்கும்? மனம்துணிந்து தன் அண்ணனைச் சுடுவார்களா? தம்பியைத் துப்பாக்கிச் சனியனால் துளைக்க எண்ணம் வருமா? வெள்ளையர், நமது இராணுவத்தினரையும் போலீசையும் ஏவிவிட்டபோது என்ன நடந்தது? எத்தனையெத்தனை இடங்களில், எமக்கு வேண்டாம் இந்த வேலை யென்று விலகினர், சுதந்திரப் போரின்போது! பம்பாயிலிருந்த கடற்படையினர் வெள்ளையுத்திரவுக்குக் கீழ்ப்படிய மறுத்ததின் விளைவாகத்தானே, பிரிட்டன் மிரளலாயிற்று. சரி சரி காரியம் கெட்டுவிடும் போலிருக்கிறது, அவர்கள் கைகளைக் கொண்டே அவர்கள் கண்களைக் குத்தி வந்தோம்இதுவரை, இனிமேல்இந்தப் 'பாச்சா' பலிக்காது போலிருக்கிறது என்று பயந்ததும்தானே பர பரவென்று இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுக்க வேண்டும் என்கிற முடிவுக்கு விரைந்தனர்!!

*   *   *

அன்றோர் நாள்! 1905!!ல் 'புடோம்கின்' கருங்கடலில் வந்து நின்றது.

புடோம்கின், ரஷியாவிலேயே பெரிய இராணுவக்கப்பல்.

ஜப்பானுடன் நடக்கும் போரில் ரஷியா தோல்விமேல் தோல்வி பெற்றுக் கொண்டிருந்த செய்திகள் எட்டிக் கொண்டேயிருக்கும் சமயம்!

அதிகாரிகள் ஜாருக்கு உடந்தை!

கடற்படையினரோ விடுதலைப் படையினருக்கு ஆதரவு கொடுப்பவர்கள்!!

ஒருநாள் 'கப்பல் தளத்தில்' சிறு குழப்பம் ஏற்பட்டுவிட்டது-

எல்லோரையும் வரிசையாக நிற்கச் சொன்னார் அதிகாரி!

மண்டியிடச் சொன்னார். அவர்கள் அனைவரையும் ஒரு பெரிய பாயைப் போட்டு மூடச் சொன்னார்!!

இராணுவத்தினரை அழைத்தார்! அந்த மூட்டையைப்போல் கிடக்கும் முட்டாள்கள், கலகம் விளைவித்தனர்—சுடுங்கள்-என்றார்!

ஒன்-டூ சொல்லியாகி விட்டது! வீரர்கள் துப்பாக்கிகளைத் தூக்கினர்.

த்ரீ—சொல்லப்பட்டது.

துப்பாக்கிகள் நேரே திரும்பின—உத்திரவிட்ட ஜாருடைய அரசாங்க அதிகாரிகளைநோக்கித் திரும்பின!!

*   *   *

இப்படிப்பட்ட சம்பவங்கள்! ஏராளம் உண்டு சரித்திரத்தில், ஆப்பிரிகாவிலுள்ள கென்யாவில் 'தலையை வெட்டும்! பயங்கர உள்நாட்டுப் போரை மாவ் மாவ் இயக்கம் துவங்கி நடத்திற்று! அல்ஜீரியாவில் உண்டான உள்நாட்டுப் போரால் என்னென்ன கொடுமைகள் விளைந்தன என்பதை பக்கத்திலுள்ள படங்களில் காணலாம்! நைஜீரியாவில் நிகழ்ந்தது உள்நாட்டுப் போர்! ஏன்? இந்தியாவிலேயேகூட ஏற்பட்டது!!

நேரு மறந்திருக்கலாம்—இப்போதுள்ள 'தேர்தல் கால' தேசீய வீரர்களில் பலருக்கு என்னவென்றே தெரியாது. காந்தியார் அறவழியில் சுதந்திரப் போர் நடாத்த வேண்டுமென்று துடித்தபோது ஒருசிலர் ஆங்காங்கும் வெள்ளையரைப் பலாத்கார வழிகளில் விரட்ட முற்பட்டனர் - பயங்கரமான குழுக்களை அமைத்தனர்-ஆயுதங்களைச் சேகரித்தனர்-அர்த்த ராத்திரிகளில் ஆங்கிலேயர் இல்லங்களைத்தாக்கினர்-அப்படிப்படட இயக்கத்தினருடைய தலைமை நிலையமாகச் சிட்டகாங் இருந்தது!!

என்ன சொன்னான் வெள்ளையன்?

இப்போது நேருஎன்ன சொன்னாரோ இதையேதான் அன்று வெள்ளையனும் சொன்னான்!!

நடத்தட்டுமே உள்நாட்டுப் போர்- நாங்களென்னபயந்தா விடுவோம் என்று மிரட்டினான்

காங்கிரஸ்வாதிகள் பிறகே தொடர்ந்தனர், 'ஆகஸ்டு'களை—அடடா! கவிழ்க்கப்பட்ட இரயில்கள்! அறுக்கப்பட்ட தந்திகள்! நாசமான உயிர்கள்! எத்தனையெத்தனை!!

உயிர்களை நாசமாக்கிடும் வழிகளை நாடுவதல்ல தி. மு. கழகம்

அரசியலில்கூட காமராஜரானாலும் அவர் சேவை மக்களுக்காக யிருந்திருக்கிறதென்றால் கட்சி பேதம் பாராது கவுரவிக்கும் மனப் பக்குவம் கொண்டது, தி. மு. கழகம்—சிலை எழுப்பவும்கூட தயங்காது.

இப்படிப்பட்ட அமைதியான அரசியல் இயக்கத்தை உள்நாட்டுப் போருக்கு அழைக்கிறார் என்றால் என்ன பொருள்!!

பஞ்சசீலம் பேசும் வாயாலேயே படைதிரட்டி வா என்று கூப்பிடுகிறார் என்றால் என்னவென்பது!!

இதையே-பஞ்சாபியரைப் பார்த்துச் சொல்ல முடியுமா? மராட்டியரைப் பார்த்துச் சொல்ல முடிந்ததா? குஜராத்தியரைப் பார்த்துக் கோபத்தோடு கேட்க முடிந்ததா?-தென்னகத்தார் என்றதும், எகத்தாளமாகப்படுகிறது பண்டித நேரு அவர்கட்கே இப்படியென்றால் மற்றவர் என்ன எண்ணுவார்கள், தென்னாட்டைப்பற்றி!!

"நான் பிரிவினைக்கு அனுமதிக்கவே மாட்டேன்''- என்கிறாரே நேரு, எத்தனையாண்டுகளுக்கு இவர் அனுமதிக்கமாட்டார்? நூருண்டுகளுக்கு மேலும் வாழ மனித உடல் சுண்ணும்பும் சிமெண்டும்போட்டுக்கட்டிய கட்டிடமா!!

1953ம் ஆண்டு நேருவுக்கு நண்பரான அட்லய் ஸ்டீவன்சன் என்கிற அமெரிக்க அரசியல்வாதி இந்தியாவுக்கு வந்து நிலைமைகளை உணர்ந்து சென்று எழுதினார்.

"மிக மிக ஆபத்தான கேள்வியொன்று இருக்கிறது. இன்று பண்டித நேரு மிகப்பெரிய தலைவராயிருக்கிறார். ஆனால் நாளைக்கு? அவருக்குப் பின்னால் யாரிருக்கிறார்கள்? என்னகதி ஏற்படும்? சுதந்திரப் போராட்டத்திலீடுபட்ட இந்தியத் தலைவர்களில் பலர் சோர்ந்து போய் விட்டனர். அவர்களிலெல்லாம் இன்னும் சோர்வடையாமலும் அகில இந்தியாவுக்கும் தெரியக் கூடியவராகவும் இருப்பவர் பண்டிதநேரு ஒருவர்தான். அவருக்குப் பின் காங்கிரசின் கதி என்ன? இந்தியாவின் கதி என்ன? அவரைப் போல யாராவது தலைவர்கள் வளர்ந்து வருகிறார்களா என்று பார்த்தால் ஒருவர்கூட இல்லை!''

ஏன் இதைச் சுட்டிக் காட்டுகிறோம் என்றால், சொன்னாராம் நம்முடைய மதிமிகு நிதிமந்திரி-அமெரிக்காவைப் பாருங்கள்! அங்கேகூட வடக்கு தெற்குப் பேசினார்கள், முடிந்ததா, என்று!!

வடஅமெரிக்கா, தென்அமெரிக்கா என்கிற பிரிவுகள் இன்றும் அங்கே உண்டு! அமைச்சர் கூடியிருந்தவர்களுக்காக உண்மையை மறைத்தார் போலும்!!

அவருக்காகவே அட்லாய் ஸ்டீவன்சன் கூறியதை எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

அமெரிக்க அரசியல் அரங்கில் முக்கியமான இடம் பெற்றவர் அட்லாய் ஸ்டீவன்சன்.

அவர் கூறியதை இன்னொரு முறை படித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

அதோடு நிறுத்தவில்லை. அவர் மேலும் எழுதினார்:

"காங்கிரஸ் கட்சி பழையதாகி விட்டது. உணர்ச்சியும் ஊக்கமும் குன்றிக் கிடக்கிறது. புதிய ஆட்களைக் காணோம், இப்படியே யிருந்தால் என்ன ஆகுமோ?''

அமெரிக்கருடைய திருவாசகம் தான் இதுவும்! மறந்திடக் கூடாது இன்றுள்ள அரசியல் கட்சிகளில் அமெரிக்கா விரும்பக்கூடிய நிலையிலிருப்பது நேருவின் காங்கிரசுதான்!!

அந்தக் காங்கிரசாட்சியை நம்பித்தான் அமெரிக்க அரசு, கோடிக்கணக்கில் கொட்டிக் கொடுக்கிறது.

அப்படிக் கொட்டிக் கொடுப்பது சரியா நமக்கு வட்டியுடன் திரும்புமா என்று கண்டாராய வந்தவர்தான் அட்லாய் ஸ்டீவன்சன்.

அவருடைய இந்தக் குறிப்புகள் அமெரிக்க சர்க்காருக்குச்

உள்நாட்டுப் போரென்றால்

'உள்நாட்டுப் போர்! என்று வெகு வேகமாகப் பண்டித நேரு அவர்கள் பேசிவிட்டார்கள்! அதன் விளைவுகள் எப்படியிருக்கும் என்பதை அந்நிய ஆதிக்கத்துடன் 'போர்' நடத்தும பல நாடுகள், சொல்லிக்கொண்டுதான் உள்ளன.



நிறுத்தி வைத்து ஒருவனைப் பலர் சுடுகிறார்கள்! விடுதலைக்குத் துரோகம் செய்து அந்நியனுடன் கூடிக் குலவியவனை உள்நாட்டுப் போரிலீடுபட்டவர்கள் 'துரோகியே! வால்பிடித்து வாழுபவனே!' என்று சொல்லிச் சுடுகிறார்கள்.



மக்களுடைய வாழ்க்கையும் உள்நாட்டுப் போர் உண்டானால் அமைதியாயிருக்க முடியாது! வெளியே வந்தால் யார் குண்டு பாயுமோ என்றே அஞ்சி வாழ நேரிடும்.

விடுதலைக்காகப் பாடுபடுபவர்கள் சுடுவார்களோ அல்லது அவர்களை எதிர்க்கும் அரசாங்க இராணுவம் சுடுமோ என்று பயந்துசாகவேண்டிய நிலைபெற்ற மக்கள் வீட்டைவிட்டு வெளியே புறப்பட்டால்போட்டுக்கொள்ளும் இரும்புக் கவச உடுப்பு இது! எல்லாக் கடைகளிலும் இப்படி பகிரங்கமாக விற்கப்படுகிறது...

அதுமட்டுமல்ல! அரசாங்க அலுவலகங்களும், அந்நியருடைய வாணிப நிலையங்களும் ஒவ்வொரு நிமிடமும் மரணத்தை எதிர்நோக்கியே வாழ நேரிடும். அந்தப் பயம் இருப்பதால், சட்டைப் பைக்குள் குண்டிருக்குமோ, உள்ளே துப்பாக்கி வைத்திருப்பானோஎன்று உத்தியோகம் பார்ப்போரெல்லாம் சோதனை செய்தே அனுப்பப்படுவர்!!

இப்படிப்பட்ட அலங்கோலங்களையெல்லாம் அனுதினம் சந்திப்பது, பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் 'போர்' புரியும் அல்ஜீரியவர்கும்.

'அறப்போர்' என் பள்ளி!

காஞ்சிபுரம்,
2—11—1961.

அண்ணன் அவர்களுக்கு, வணக்கம்.

தங்கள் மலரையும் (அறப்போர்), அடுத்து வந்த இதழையும் கண்டேன்; மகிழ்ச்சி யடைந்தேன். என்ன சொல்லி பாராட்டுவதென்று எனக்குப் புரியவில்லை.

நான் மொழியால் கன்னடியன்; நாட்டால் தமிழன்; இனத்தால் திராவிடன், என்று சொல்லிக் கொள்வதில் பெருமையடைகிறேன். எவனொருவன் தன் தாய் மொழியைக் கற்காமல் இருந்து, 'நான் அம்மொழிக்காரன்' என்று சொல்லிக் கொள்வதில் பெருமையில்லை. அந்தக் குறையினை, எனக்கு அளிக்காமல் விட்டதற்கு, 'அறப்போர்' ஆசிரியரையும், மொழிப் பாடத்தை எழுதும் 'அப்பா' அவர்களையும் என்ன சொல்வதென்றே எனக்குப் புரியவில்லை. 'அய்யா பாராட்டாதீர் வந்த பாடங்களைக் கவனமாகப் படித்து, திராவிடத்திற்கு நீர் செய்யும் தொண்டுதானே பெரிது' என்று சொல்லாமல் சொல்லும் உங்கள் எண்ணம் எனக்குப் புரிகிறது. நான் இனி பாடங்களைத் தொடர்ந்து படிக்கப்போகிறேன்.

அறப்போர் எனக்கு இப்போது ஆரம்ப பாடசாலை, அது நடுநிலைப் பள்ளியாகவும் உயர்நிலைப் பள்ளியாகவும், கல்லூரியாகவும், பல்கலைக்கழகமாகவும் விளங்கவேண்டும் என்பதே என் பேரவா.

இப்படிக்கு,
எம். செல்வராசன்.

சமர்ப்பிப்பதற்காக, தயார் செய்யப்பட்டவை.

அந்த அறிக்கையில் அவர் இன்னென்றும் எழுதியிருக்கிருர். மிக முக்கியமான பகுதி அது:

"இந்தியா ஒன்ருகவே இருக்க முடியுமா?-என்ரேர் ஐயம் இங்கு வந்து கண்டபிறகு எனக்கேற்பட்டிருக்கிறது. ஏனெனில் அவ்வளவு குழப்பங்கள் இந்தியாவில் உள்ளன சுமார் பன்னிரண்டு பெரிய மொழிகள் இருக்கின்றன. ஒவ்வொரு மொழியும் ஒரு கோடிக்கு மேற்பட்ட மக்களால் பேசப்பட்டு வருகிறது. இதுமட்டுமல்ல, தேசத்தைப் பல ராஜ்யங்களாகப் பிரிக்கப்படவேண்டும் என்கிற முழக்கமும் வலுப்பெற்று வருகிறது"

அமெரிக்காவின் உன்னதமான அரசியல் வாதிகளில் ஒருவர் இப்படி எழுதினுர்! அமைச்சர் சுப்ரமணியமோ அந்த அமெரிக்காவை உதாரணத்துக்கழைத்து உரத்து முழக்கமிடுகிருர்பிரிவினை பலிக்காது என்று!!

உள்நாட்டுப் போர் மூட்டிவிடுகிற நிலைமையிலே ஒரு கட்சி இருக்கிறது என்றேவாதத்துக்கு வைத்துக் கொள்வோம். கத்திகள்தீட்டப்படுகின்றன! கேடயங்கள் தயாரிக்கப்படுகின்றன; பீரங்கிகள் துடைக்கப்படுகின்றன! நாட்டு வெடிகுண்டுகள் தயாரிக்கப்படுகின்றன! போருக்கான ஆயத்தங்கள் எல்லாம் தயாராக்கப்பட்டுவிட்டன.:

அப்போதுகூட நேருவைப் போன்ற உத்தமர்கள் என்ன சொல்ல வேண்டும்?

"டேய்! என்னை யாருன்னுடா நினைச்சே! எங்கிட்டேயா 'ராங்' பண்றே? விட்டேன்னு அவிழ்த்து என் சுருள் கத்தியை, விழுந்துடுவே! ஆமாம்!"—என்பது 'செங்காங்கடை' சீற்றல்மொழி!!

அதைப்போல சுப்பிரமணியனுர் பேசலாம்—அப்படிதான், மதுரையில் அவரும், நேரு பேசிய பின்பு பேசினுராம், "உள்நாட்டுப் போரளவுக்கு நாங்கள்விட மாட்டோம். இந்த தி. மு. க.வைச் சரியானபடி நாங்கள் பார்த்துக் கொள்கிறேம்" என்று.

பாருக்கெல்லாம் பஞ்சசீலம் போதிக்கும் நேரு, கிளம்பலாமா சண்டைக்கு! சண்டையெனும் சொல்லை அவரது வாயால் உச்சரிப்பதே ஆபாசமாயிற்றே!!

பிறகு அவரைப்பற்றி என்ன நினைக்கும் உலகம்? ஊருக்கு உபதேசிப்பார், ஆனுல் உள்ளுக்குள் ரணகளத்தை விரும்புவார் என்று கேலி செய்யாரோ பிறர்!!

அப்படியே உயிர்போகும் உள்நாட்டுப் போர் துவங்கி அதில் நேரு பண்டிதரின் திறமைமிக்க படைகள் சுட்டுத்தள்ள, திராவிட முன்னேற்றக் கழகத்திலிருக்கும் நான்கு லட்சத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களும் பிணமாகக் கிடக்க, அந்தப் பிணங்களின் டுவே, சுடலைக்காளி போல,: சுடுகாட்டுப் பரமசிவன் போல நேரு வருவதா அவருக்குப் பெருமை!

நமக்கே எண்ணிட அருவருப்பாயிருக்கும்போது நேருவுக்கு வரலாமா அந்த நினைப்பு?

"நாங்கள் கெட்டவர்களாயிருக்கலாம்— அயோக்கியர்களாயிருக்கலாம், ஆனுல் அப்படிப்பட்டவர்களைத் திருத்த கோபித்துக் கொள்வதா வழி? எழுப்பப்படும் பிரச்னைகளில் தன்னுடைய அறிவை பயன்படுத்த வேண்டுமே ஒழிய சும்மா கோஷங்கள் போட்டு விட்டால் போதுமா? கோபித்துக் கொண்டு விட்டால் நல்லதா?"

—இவ்வாறு நாம் கேட்கவில்லை நேரு அவர்களை! சென்னை கடற்கரைக் கூட்டத்தில் ஆச்சாரியாரைப் பார்த்துக் கேட்டிருக்கிருர் பண்டித நேரு!!

அவையடக்கமும், பண்பும் மிளிர்கிறது இந்த வார்த்தைகளில்.

நாம் இதயத்தில் மதிக்கும்நேரு இப்படித்தான் பேசுவார்!!

மதுரையில்ஏற்பட்ட கொதிப்பு சென்னைக் கடற்காற்று பட்டதும் அடங்கிவிட்டது போலும்.

அவர் கூறிய வாசகங்களையே அன்பர் நேரு அவர்களுக்கு அர்ப்பணிக்கிறேம்.

நாங்கள் கெட்டவர்களாயிருக்கலாம்—முட்டாள்களாயிருக்கலாம் —அயோக்கியர்களாயிருக்கலாம் —தவருன வழியில் செல்பவர்களாகயிருக்கலாம்!!

நேரு போன்ற பெரிய மனிதர்கள் செய்ய வேண்டியது என்ன? எடு! சுடு!!—என்பதா?

இதற்கு காந்தி சீடரா தேவை. கசாப்புக் கடைக்காரர் போதுமே.

சனநாயக வழி, நேரு ஏற்றுக் கொண்ட ஒன்று!

நம்முடன் விவாதிக்கட்டும்— என்னென்ன தீமைகள் என்பதை விளக்கட்டும்—முட்டாள்கள் நாம் என்பதை விளக்கட்டும்.

"செச்சே! இதுகளை நான் ஒருமைப்பாட்டு · மாநாட்டுக்கே அழைக்காதபோது நேரில் கூப்பிட்டாப் பேசுவேன்" என்ருல் இருக்கவே யிருக்கிருர்கள் மக்கள்!!

உங்களது மந்திர தந்திர மாயாஜால வழிகளைக்கொண்டு, மக்கள் மனதைத் திருத்துங்கள்—

ஒருமைப்பாட்டுணர்.ச்சியை உருவாக்குங்கள்—

எங்களுக்கு இடமில்லாமலே செய்யுங்கள்!!

அது சரியானவழி. சனநாயக வழி.

மக்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டால், நாங்கள் ஆரம்பித்த இயக்கம் மடிந்து மண்ணோடு மண்ணுய்ப் போய் விட்டுப் போகிறது.

பெருமூச்சு விட்டு விட்டு நாங்களும் மூலைக்குப்போய், முக்காடிட்டு, முத்தண்ணுக்களாகி விட்டுப் போகிறேம்.

அதைவிட்டு,

"உள்நாட்டுப் போர்வந்தாலும் சரி. அனுமதிக்கமாட்டேன்"

—என்று அவர் ஓங்காரக்கூச்சலிடுவதும்,

"அந்தளவுக்கு விடோம்! நாங்களே பார்த்துக் கொள்வோம்"

—என்று இங்குள்ளவர் மிரட்டுவதும்,

இதைக்கண்டு சண்டியர்களும் கத்தி கபடாவைத்தே காலந்தள்ளுபவர்களுள் நமக்கு நல்ல வேட்டை—நாலு தி. மு. வை உதைத்து வெட்டினுல் நானூறு ஐநூறு கிடைக்கும் என்று நாக்கைச் சப்புக் கொட்டுவதும் நாகரீகமா! நல்லதா! வாழ வழிதான் செய்யுமா!

"ஓகோ! நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை. தி. மு. க. போக்கு இப்படியே போனுல், சட்டம் போட்டு மட்டந்தட்டி விடுவோம் என்கிற பொருளில், சொன்னேன்."

எனக்கூடும் அமைச்சர்! அந்தத் தைரியம் 'நாவை அறுப்பேன்' என்ற காமராசருக்கும் உண்டு!!

அதுகூட ஒரு சனநாயக அரசுக்குத்தேவையா—சட்டம் போடுவதன் மூலமோ மக்களுடைய மனதை மாற்றிவிட முடியும்- அப்படிப் போடுகிற சட்டங்கள் தான் ஒரு விடுதலை யுணர்ச்சிக்குப் போடப்படும் எருவும் தழையும் என்பது ஒரு புறமிருக்க எப்படிப்பட்ட மனவளம் ஏற்பட்டிருக்கிறது காந்தி சீடர்களுக்கு என்றே கண்ணீர் வடிக்கிறேம்!!

ஒருமைப்பாடு - உள்நாட்டுப் போர் மூண்டாலும் விடேன்- என்று நேரு அவர்கள் கர்சித்த அதே சமயத்தில் அவருடைய சொந்த மாநிலமான உத்திரப் பிரதேசத்திலுள்ள அலிகாரிலும் மீரட்டிலும் மக்கள் வெட்டிக் கொண்டுமடிகிருர்கள்! பதினைந்து பேருக்கு மேலிருக்குமாம் செத்தோர்-25 பேருக்கு மேல் படுகாயமாம்-வகுப்பு வெறி காரணமாம்!!

ஒருமைப்பாடு மாநாடு கூட்டப்பட்டு கல்விச்சாலைகளில் இந்திய ஐக்கியம்பற்றிப் பேசப்பட்டு விட்டால் போதும் என்று டில்லியிலே கூடிப் பேசினுர்கள்.

மாநாடு முடிந்து ஊர் திரும்பவில்லை! அலிகார் பல்கலைக் கழகத்துக்குள் மாணவர் மன்றத் தேர்தலின் காரணமாக தகராறு ஏற்பட்டு ஊரே இரண்டுபட்டு இப்போது மாகாண முழுதுமே இரு பிரிவாகிக் கிடக்கிறது!!

என்ன காரணம் இதற்கு? பஞ்சசீலத்திலுள்ளது போல, மனிதநெறி வளராததுதான்!!

வேற்றுமை களிருப்பினும், அவைகளை ஒருபுறம் ஒதுக்கி நட்போடு வாழ, வழி வகுக்க வேண்டும்.

நான்தான் எல்லாம்! நான் எதையும் சாதித்து விடுவேன்!!- என்கிற முரட்டுக்குணம், இட்லர் முசோலினி பெற்றிருந்த குணம்; நேருவுக்குத் தேவையில்லாதது

தேன் தேடும் வண்டு மலரைத் தான் நாடும்! உருள் வண்டோ மலத்தையே தேடும்!!

கிளி பழங்கொத்தப்போகும்! கழுகு பிணம் தின்னஓடும் - கிளிபோன்றவர் என்கிறது பண்டித நேரு அவர்களை உலகம் - நாமும், அவர் அப்படியிருந்து தான் செய்ததியாகங்கள். உலகமுள்ளவும் பேசும்படி விளங்க வேண்டும் என்று விரும்புகிறேம்.

ஆனுல் கிளியைக்கழுக்காக்கி விட்டார்கள், இங்குள்ள காங்கிரஸ்காரர்கள்! காமராசரும் 'கனம்' சுப்ரமணியனுரும் நம்மைத் தாக்கிட அழைத்து நல்லவரின் நாக்குக்கு மறையாத 'வடுவை' ஏற்படுத்திக் கொடுத்து விட்டார்கள்!!

—*—*—

உங்களது தேவைக்கு

V.G.பன்னீர்தாஸ்&கோ.

சைதாப்பேட்டை ரயில்வே ஸ்டேஷன் எதிரில்

போன்: 88084 சென்னை-15

பிராஞ்சு:

மாம்பலம் ரயில்வே ஸ்டேஷன் எதிரில்

27, ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை-17



சுலபமானது

தவணைகளில் வாங்குவது

[சென்னை வாசிகளுக்கு மட்டும்]

மர்பி, நேஷனல்-எக்கோ, ஜி. இ. ஸி. ரேடியோக்கள் மற்றும்

சைக்கிள், கைக்கடிகாரம், வால் கிளாக், மின்சார விசிறி, தையல் மிஷின் முதலியன

- எளிதில் வாங்க விசேஷ சலுகைகள்
- விரும்பும் மாடல்களில் உத்திரவாதத்துடன் கிடைக்கும்

murphy radio

Delights the home!

இன மொழி கற்பீர், இனப் பண்பில் நிற்பீர்!

பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்

இந்தப் பாடத்துடனும் அடுத்த பாடத்துடனும் நெடுங்கணக்கு விளக்கம் முற்றுப் பெறுகிறது. அடுத்தப் பாடங்களில் அந்தந்த பாடத்தில் வேண்டிய எழுத்துக்கள் ஐந்து, ஆறு கொண்ட தொகுதிகளாக மீண்டும் தரப்படும். எழுத்துக்களை எழுத வாசிக்க அப்போது கற்றுக் கொள்ளலாம்.

ஆகவே நெடுங்கணக்கை இப்பொழுதே முழுதும் படித்துவிட வேண்டுமென்ற அவசியம் இல்லை. மேலே நாம் குறித்துள்ளபடி ஒப்புமைத்காகவே அவை தரப்படுகின்றன.

மெய் எழுத்துக்கள்
(அகரத்துடன் கூடிய உயிர் மெய் வடிவம்)

	பட்டியல் எண்	தமிழ்.	மலையாளம்.	தெலுங்கு.	கன்னடம்	ஆங்கில ஒலிக்குறிப்பு
1. 'க' வர்க்கம்	1.	க	ക	క	ಕ	Ka
	2.	...	ഖ	ఖ	ಖ	Kha
	3.	...	ഗ	గ	ಗ	ga
	4.	...	ഘ	ఘ	ಘ	gha.
	5.	ங	ങ	ఙ	ಙ	ṅa (nga).
2. 'ச' வர்க்கம்	6.	ச	ച	చ	ಚ	ca (cha)
	(6a).	-----	-----	ౘ		tsa.
	7.	... *	ഛ	ఛ	ಛ	cha (chha)
	8.	(ஜ)	ജ	జ	ಜ	ja.
	(8a).	...	...	ౙ	...	dza.
	9.	...	ഝ	ఝ	ಝ	jha.
	10.	ஞ	ഞ	ఞ	ಞ	ñ (jna)
3. 'ட' வர்க்கம்	11.	ட	ട	ట	ಟ	ṭa
	12.	...	ഠ	ఠ	ಠ	ṭha
	13.	...	ഡ	డ	ಡ	ḍa
	14.	...	ഢ	ఢ	ಢ	ḍha
	15.	ண	ണ	ణ	ಣ	ṇa
4. 'த' வர்க்கம்	16.	த	ത	త	ತ	ta (tha)
	17.	...	ഥ	థ	ಥ	tha (thha)
	18.	...	ദ	ద	ದ	da
	19.	...	ധ	ధ	ಧ	dha
	20.	ந	ന	న	ನ	na
5. 'ப' வர்க்கம்	21.	ப	പ	ప	ಪ	pa
	22.	...	ഫ	ఫ	ಫ	pha
	23.	...	ബ	బ	ಬ	ba
	24.	...	ഭ	భ	ಭ	bha
	25.	ம	മ	మ	ಮ	ma
அரையுயிர் or தமிழ் இடையினம்	26.	ய	യ	య	ಯ	ya.
	27.	ர	ര	ర	ರ	ra
	28.	ல	ല (ല)	ల	ಲ	la
	29.	வ	വ	వ	ವ	va
	30.	ழ	ഴ	(ఴ)ஃ	(ೞ)ஃ	ḻa (zha)
	31.	ள	ള	ళ	ಳ	ḷa
தமிழ் 'ற' வர்க்கம்	32.	ற	റ	(ఱ)ஃ	(ಱ)ஃ	ṟa
	33.	ன	...			ṉa
கிரந்த எழுத்துக்கள்	34.	(ஷ) *	ഷ	ష	ಷ	ṣa (sha)
	35.	...	ശ	శ	ಶ	ça (sha)
	36.	(ஸ) *	സ	స	ಸ	sa
	37.	(ஹ) *	ഹ	హ	ಹ	ha.
கூட்டெழுத்து.	38.	(க்ஷ) *	ക്ഷ	క్ష	ಕ್ಷ	Ksha

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ விடுபவர்கள்! செல்வமும் அச்சூதுமதியினரின்வாழ்த்தொலிகளுக்கிடையே அப்பெரியாரின் வழியே பின் செல்லுகிறான்!

* * *

ஆமாம்! திராவிடத்திடலின் 'அரசியல்' கடலினுள் காங்கிரஸ் பள்ளத்தாக்கில் 'ஜனநாயகம்' என்ற மீனைப்போல் பதுங்கிக் கொண்டிருக்கும் 'சர்வாதிகார' முதலையை, 'தமிழர் நல' மீனுக எண்ணி, 'தேசீய' தூண்டிலு'டன் வகையிழந்து நடைபோடுகிறார், ஈ. வெ. ரா.—'என் வழியிலேயே வா' என்று தன் 'வாரிசு' சம்பத்தைத் துணைக்கழைத்தவாறு! 'சம்பத்தும் 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்று பின்தொடருகிறான்!

"திராவிடத்தின் விடுதலை" யென்ற சீரிய முத்தை எடுப்பதற்கு திராவிடத்தின் திருக்கூட்டமென்னும் தி. மு. க.வின் தலைவரும் 'தமையனு'மான அண்ணா, கண்ணீர், வடித்துக்கொண்டேயிருக்கிறார்! சம்பத்தின் பிரிவிற்காக! ஆனால் அவருடைய புதிய தலைமைக்காக அல்ல! சம்பத், தம்பிதன்மையை யிழந்ததற்காக: அவரின் துரோகத்தன்மைஎழுந்ததற்தாக அல்ல! சம்பத்தின்பாசம பறக்கடிக்கபபட்டதற்காக! ஆனால் அவர் பணத்தைப் பதுக்கிக் கொண்டார் என்பதற்காக அல்ல ஆனால் சம்பத்திற்கு இல்லை, இல்லை—திரு. சம்பத்திற்கு அண்ணாவின் கண்ணீரே—காணாது; அறிவொளிப் பொன்மொழியோ கேளாது!—அவர்தான் 'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' என்றல்லவாசொல்கிறார்!' தந்தை சொல்லைக் காக்க ராமன் கானகமடைந்தான்; தந்தையின் சொல்லுககாக பரசுராமன் தாயையும் கொன்றான்' என்று கதைகளில்லையா?—அப்படியிருக்க, சம்பத்திற்கு மட்டுமென்ன அது விதிவிலக்கா?

ராமனும், பரசுராமனும் கற்பனைக் கதைகளில் காணப்படும் அவதாரப் பாத்திரங்கள்! ஆனால் சம்பத்தோ மனிதர்! அதுவும் இந்த இருபதாம் நூற்றாண்டின் படித்த ஒரு பட்டதாரி! எனவே உண்மையை உணர்ந்த மக்கள், 'தந்தை சொல் மிக்க (ம) தந்திரமில்லை'என்றல்லவா கொள்ளுவார்கள்! ஐயோ—பெரியாரே!! ஐயகோ சம்பத்தே!!!

குறியீட்டு விளக்கம்

* தமிழில் 19-ம் நூற்றாண்டிறுதியிலிருந்து சமஸ்கிருத அயல் மொழிச் சொற்களில் பயன்படுத்தப்படும் சமஸ்கிருத கிரந்த எழுத்துக்கள்.

ஃ பழந் தெலுங்கிலும் பழங் கன்னடத்திலும் வழங்கிய பழந் தமிழ் (திராவிட) எழுத்துக்கள்.

'போஸ்டு' பேசுது போஸ்டு!!

ஓரே ஒரு நிமிடம்!

கொஞ்சம் நில்லுங்க...

மதுரையிலே தி. மு. வை வெளுவெளுன்னு நான் வெளுத்துக்கட்டியதைக் கேட்டீங்களா?

போடு போடுன்னு, போட்டேன்!

எம்பி, எம்பிக் குதிச்சேன்!!

'எம். பி' யாகப் போறதுக்காக எம்பிக் குதிச்சேனுன்னு கேட்கிறீங்களே—'எம். பி.' யாகிறதா, எனக்குக் கஷ்டம்—என் தொகுதி பூராவும் எங்கக் கவுண்டருங்கதான்! அடடே! சாதிப்பெயரைச் சொல்லி ஓட்டுக் கேட்கக் கூடாதுன்னு சட்டம் வந்திருக்கே? அதை ஞாபக மூட்டிறீங்களா!! என்னங்கபண்றது மெட்ராசிலேகூட நிக்கலாம் ஓட்டுவிழாதே! யாருக்கிட்டேயும் சொல்லாதீங்க, நான் எங்க சாதிக்காரங்க இருக்கிற இடத்திலே நின்னு எப்படியாவது 'எம். பி.' யாகனும்...

'எம். பி.' யானுத்தானே டில்லி மந்திரியாக முடியும்!

என்னுங்க சிரிக்கிறீங்க?—நிசங்க! நான் டில்லி மந்திரியாகப் போறேன்க! அநேகமா, மொரார்ஜி தேசாயைப் போகச் சொல்லிட்டு, நிதி மந்திரி 'போஸ்ட்'டிலே என்னை ஏத்தி நேருஜி உட்கார வைச்சுடுவாரு!!

அப்படி உட்கார வைச்சா—நான் எப்படி நடந்துக்குவேன்கிறதை, காட்ட வேணும், நேருவுக்கு? அதனுலேதான் தி. மு. க. வைப்பிடிச்சு ஒரு உலுக்கு உலுக்கி, 'கோ'வென்று கதறினேன்!!

நிசந்தாங்க—அப்படிப் பேசினுத்தான் 'அவருக்கு'ப் பிடிக்கும்—அவருக்குப் பிடிச்சாத்தான், என் ஆசை சுலபமா பலிக்கும்.

உளறலீங்க — உண்மையைத்தான் சொல்றேன்—தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவராயிருக்காரே ஒழலூர் அளகேசன், அவரு போன முறை பார்லிமெண்டுக்குப் போனப்போ, விடமாட்டாரு—அது என்னுச்சு! இது என்னுச்சு!—எங்க தென்னுட்டைக் கவனிக்க மாட்டேன்கிறீங்க வடநாட்டைக் கவனிக்கிறீங்கன்னு சளசளன்னு சப்தம் போட்டுக்கிட்டே யிருப்பாரு, சபையிலே.

பார்த்தாரு, நேரு! இந்தான்னு ஒரு டெபுடி மினிஸ்டர் போஸ் கொடுத்தாரு.

இன்னைக்கு அகில இந்திய காங்கிரஸ் தலைவராயிருக்காரே சஞ்சீவி ரெட்டி, அவரு ஆந்திர முதல் மந்திரியா யிருந்தப்ப, இப்படித்தான் அடிக்கடி வடநாடு தென்னுட்டைக் கவனிக்கிறதில்லே—போதுமான பணம் கொடுக்கிறதில்லேன்னு புலம்பிக்கிட்டேயிருப்பாரு. உங்களுக்கு ஞாபகம் இருக்கா! அ. பொ. அரசு மேயரா யிருக்கிறப்ப, கார்ப்பரேஷன் ஒரு வரவேற்புக் கொடுத்துச்சு அவருக்கு. ஆமாங்கன்னு! திமுக ஆட்கமேலே, எனக்கு எரிச்சல் தான், அவுங்களைப்போலப் பேச வரமாட்டேங்குதேன்னு. ஆனு, உண்மையை மறைக்கக்கூடாது பாருங்க. அவுங்க, காங்கிரஸ்காரருன்னும் பார்க்காமே மரியாதை செஞ்சாங்க, மடை திறந்தாப்பலே, பேசினுரு சஞ்சீவி, 'தென்னுடடுக்காரங்களாகிய நாமெல்லாம் ஒண்ணு சேர்ந்து போராடினுத்தான், டில்லிகிட்டே யிருந்து சலுகை வாங்க முடியும்'னு, இன்னு ஒருபடி மேலே போயி, 'டில்லிக்கும் நமக்கும் ரொம்ப தூரம்'னு கூடச் சொன்னுரு.

கேள்விப்பட்டாரு, நேரு! இந்தா, நீ ஒரு தடவை ஆல் இன்டியா லீடரா வா, உட்காரு காங்கிரஸ் தலைவரான்னு பிடிச்சு உட்கார வைச்சிட்டாரு.

டாக்டர் சுப்பராயனுக்கு மட்டும் எப்ப மந்திரிப் பதவி வந்துச்சுன்னு நினைக்கிறீங்க? இந்தியை எதிர்த்து அவரு கையெழுத்துப் போட்டாரே, ஞாபகமிருக்கா, அப்புறந்தான் அடிச்சுது சான்சு!

அது ஏன்? நம்ம மேயன்னு தீயன்னு இல்லே—அதாங்க மேதி! கவர்னராயிருக்காரே-அவருக்கு இப்படியொரு 'போஸ்டு' எப்பக் கிடைச்சுதுன்னு நினைக்கிறீங்க? டில்லியை எதிர்ப்போம்னு அசாமிலே கலாட்டாப் பண்ணின பிறகுதான்!!
எவன் எதிர்ப்பான்னு தெரியுதோ, அவனுக்கு நேரு ஒரு 'போஸ்டு' கொடுப்பாரு...

நானும் அதே வழியிலே போகலாமான்னு பார்த்தேன்! அதனுலேதான் 'தேவநாகரி'யை ஒத்துக்க மாட்டேன்னு, டில்லியிலே, மேசையைத் தட்டிப் பேசினேன்...... அவரும் புரிஞ்சுக்கவேணும்—இவனுக்கு ஒரு 'போஸ்ட்' கொடுத்தா, நல்லது தி. மு. கவைத், நல்லாத் திட்டத்தெரியுது, இவனுக்கு! — அப்படீன்னு.

அதான் அப்படிப் பேசினேன்! எங்ககிட்டே விட்டுடுங்க தி. மு. க வை—அப்படியே கிழிச்சுக் கொதறி உதறிடுரோம்னு சொன்னேன்!! எப்படியோ, ஒண்ணு—பயம்—இல்லேன்னு நயம்—இரண்டிலே எதையாவது நினைச்சி, எனக்கொரு 'போஸ்ட்' கிடைக்கனும் பாருங்க...அதான் தி. மு. க மேலே பாய்ஞ்சேன்...

ஏற்கனவே, பத்தாண்டு ஒப்பந்தம் பேசினேன் தி. மு. க கிட்டேன்னு ஒரு கெட்டபேரு வேறு இருக்கே, எனக்கு! என்ன செயறதுங்க? எப்படியாவது ஒரு 'போஸ்டு'

என்னது—'கோஸ்டு' இல்லீங்க — கோஸ்டுன்னு பேயின்னு அருத்தம்! போஸ்டுன்னு பதவின்னு அருத்தம்!! ஆமாம், கோஸ்டுனனு சொல்லாதீங்க, இன்னொரு தடவை,

வரட்டுங்களா?

(3-ம் பக்க தொடர்ச்சி)

வில்லே. இன்னும் எனக்கு 50 ரூபாய் பாக்கி, அய்யாவிடமிருந்து வரவேண்டும்!!

* * *

திராவிடர் கழக மத்தியக் கமிட்டி கூடி அய்யாவை வேண்டியது—தனிப்பட்ட பலரது வேண்டுகோள்கள் சென்றன—எதையும் பொருட்படுத்த வில்லே, அய்யா. அதனுல் அய்யாவின் போக்கைக் கண்டு வருந்துகிறவர்கள் யார் யார் என்ற பட்டியலே அண்ணு அவர்கள் 'திராவிட நாடு' ஏட்டில் போடலானுர்கள்! ஒருநாள் காலே 8 மணியிருக்கும். அண்ணு தங்கியிருந்த தேவராசனுர் இல்லத்துக்குப் போனேன். அப்போது அண்ணுவிடம் கார் கிடையாது. மறைந்த தேவராசனுரின் கார்தான் பயன்பட்டது. காஞ்சிபுரம் புறப்பட்டுக் கொண்டிருந்த அண்ணு, என்னைப் பார்த்து—'ஆமாம்! நீ காஞ்சிபுரத்துக்கு வந்ததில்லேயே?'' என்று கேட்டார். 'இல்லே' என்றேன். 'இங்கொன்றும் வேலேயில்லேயே' என்ருர். 'இல்லே!' என்றேன். 'அப்போ, வா போகலம்' என்ருர். ஜீப்பில் ஏறிக் கொண்டேன்! முதன் முதலாக என் வாழ்க்கையின் முக்கியமான பகுதியைக் கழித்த, காஞ்சி மாநகரை நான் கண்டேன்!!

—வளரும்.

திருத்தம்

29—9—61-ந் தேதி இதழில் 'கேரளத்தில் தி. மு. கழகம்' என்ற கட்டுரையில், அதை எழுதியவர் 'த. வே- திருமாறன்' என்றிருப்பதை 'தி- வே- திருமாறன்' என திருத்திக் கொள்க

ஆ—ர்

இதோ ஒரு சஞ்சீவி

கால் ஆணிக்கு

(மேல் பூச்சு மருந்து)

காலில் குழி விழுந்தும், சதை வளர்ந்து முற்றியும் நடக்க முடியாமல் வருந்துபவர்களுக்கு நிச்சயநிவாரணி

விலேதபால்செலவுடன் 4- 25

வாணி புக் டிபோ,

3, மலேயபெருமாள் தெரு,
சென்னே-1.

பாராட்டுக்குரியவை

"நான் பெரியார் ஈ. வி. ஆர் தொண்டனாகஇருந்தசமயம்மிலட்டூரில் நடந்தபெரியாரின் சொற்பொழிவுக் கூட்டம் (9—7—57ல்) முடிந்தவுடன் செயலாளர் இராமையா அவர்களுடைய இல்லத்தில் அய்யா அவர்களுக்கும் மற்றும் கழக முக்கியஸ்தர்களுக்கும் இரவு உணவு ஏற்பாடாகி இருந்தது. சாப்பாடு முடிந்ததும் அய்யா அவர்கள் சிறிது நேரம் ஓய்வு எடுத்துக்கொண்டார்கள்

அந்த நேரத்தில். காரியதரிசி சீனுவாசன் பி. ஏ. அவர்களிடம் ஈ. வி. ஆர். சொன்னதாவது: '-இன்னும் கொஞ்ச நாள் கழித்து பாரேன். இந்த கண்ணீர்த்துளி பசங்க கதர்உடை அணிந்துகொண்டு காங்கிரசுக்கு பிரச்சாரம் செய்வானுங்க"

இன்று அவரே அந்தப்பணியில் ஈடுபட்டிருப்பதையும் துணைக்கு ஈ. வி. கே. எஸ். அவர்களையும் அழைத்துக்கொண்டு பச்சைதமிழருக்கு விருந்து வைக்க பச்சை மீன் பிடிக்க போவதும் அங்கே ஏகாதிபத்யம் என்ற முதலை வாயை பிளந்துகொண்டு இவரை விழுங்கக்காத்திருப்பதையும்தான் படத்தில் காண்கிறோம்.

கே. பி. மொகிதீன்,
அய்யம்பேட்டை,
தஞ்சை.

* * *

குறிப்புகள்:

மீனவர்கள்: ஈ. வெ. ரா. பெரியார் அவர்களும், கன்னட சம்பத்தும்.

குளக்கரை: தமிழ் நாட்டுஅரசியல்.

தூண்டில்: கயமைத் தன்மையும் கண்ணியமற்ற செயல்களும்.

கைக்கூடைகள்: கட்சிகள்.

முதலை: காங்கிரஸ்.

மு. பாண்டியன்,
கோவை

* * *

"மைந்தனும் பின்பற்றிச் செல்கிறார், மேலும் தந்தை திருமணத்திற்கும், பெயர் வைப்பதற்கும் பணம் கேட்டால் மைந்தன் கேள்விக்குப் பதில் சொல்லப் பணம் கேட்கிறார், இரு துருவமாயிருந்த தந்தையும் மகனும் ஒன்றுசேர்ந்து ஒரே துறையில் செல்கின்றனர் காங்கிரஸ் முதலைக்குப் பலியாக.

கே. சாவித்திரி,
குடியாத்தம்

* * *

காங்கிரசென்னும் நீர்நிலையிலேயே இறங்கிவிட்டார் கட்சியினைப் பயன்படுத்தும் கடமையினை மறந்துவிட்டபெரியார். காரணம் கழகத்தின்மீது அவர்கொண்டுள்ள காழ்ப்பு அவர் அறிவுக் கண்ணை மறைக்கிறது; தடுமாற வைக்கிறது, அதே நிலையினைப் பெற்ற புதுக்கட்சியாரும் தந்தையின் வழியிலேயே நடைபோடுகிறார். அவர்கள் அறியாத காங்கிரசில் குடிகொண்ட சூழ்ச்சி, துரோகம் ஆகியவைவாய்பிளந்து காத்திருக்கிறது. இருவரையுமே விழுங்கிவிட்டு ஏப்பம் விடுவதற்கு 'திராவிடர் கழக அனுதாபிகள் காங்கிரசில் சேரலாம்' என்றஐயாவின் கூற்று நிகழவிருக்கும் வீழ்ச்சியின் அறிகுறியே. கடுகிவரும் விளைவுகளின் முடிவுக்காக காலம்தரும் தீர்ப்புக்குள் காத்திருப்போம். நம்மால் வேறென்ன இயலும்?

பா. பக்தவத்சலம்,
தேவங்குடி

* * *

பெரியாரும் சம்பத்தும் செல்லும் காட்சி மீன் பிடிப்பவர்கள் போல ஏமாற்றுவது மாதிரி தோன்றுகிறது. அவர்கள் தூண்டிலை எடுத்துச்செல்லும்முறையே விளக்கும் இதிலிருந்து அவர்கள் மற்றவர்களை ஏமாற்றவே கட்சி நடத்துகிறார்கள் என்று அறியக் கூடும்.

மாமூலன்,
மாவூர்.

* * *

அந்தோ பரிதாபம்! எந்த முதலை வாழட்டும் என்று பிரச்சாரம் செய்தனரோ அதேமுதலைக்கு அப்பெரியவரும் அவர் மகனும் ஒருவர் பின் ஒருவராக பலியாயினர்.

அன்புமுடி,
முகவை.

* * *

"தொழுதகையுள்ளும் படை
யொடுங்கும் ஒன்னார்
அழுத கண்ணீரும் அனைத்து."

என்ற திருமறையை அறியார் போலும் திரு. பெரியார். அறிந்திருந்தால்: தனிச்சிறப்போடு தனித் தலைவனாக தி. க. வில் இருந்த போது தன்னை மறந்து, காமராசரின்வாய்க்கு (முதலைக்கு) இரை கொண்டு செல்வாரா. சென்று விட்டார் என்பதைத்தான் சித்திரம் சித்தரிக்கிறதே. தன் கட்சியினர் அனைவரையும்காங்கிரஸில் சேரும்படி கூறிவிட்டார். தானும் காங்கிரஸுக்குஉழைக்கப்போகிறேன் என்கிறார்.

ஏ. அழகர்சாமி.
வேடசந்தூர்

* * *

"சுகவாழ்வு என்ற மீனை பிடிக்க
சுயநலம் என்ற தூண்டிலைப்
போடுகிறார்கள் அங்கு
காங்கிரஸ் என்ற பள்ளத்தில்
காமராஜர் என்ற முதலை
இருக்கிறது

அது கண்டிப்பாக இவர்களுடைய மீனையும் இவர்களுடைய தூண்டில்களையும் இவர்களையும் விழுங்கிவிடும்"

மு. காளிதாசன்,
சீராமபுரம்;
பெங்களூர்.

—०—०—

நான் கண்ட பெரியார்

நண்பர் அரங்கண்ணல் அவர்களுக்கு நண்பன் ஜி. வி. கோபால் எழுதிக்கொண்டது.

என்னை உங்களுக்குத் தெரிய வழியில்லை. நான் பொன்மலை பராங்குசத்தோடு ஓர்க்ஷாப்பில் பணியாற்றி(46 முதல் 58 வரை) தற்சமயம் ராஜினாமாசெய்துவிட்டு எண்ணூர் அசோக் லேலண்டில் பணியாற்றிக்கொண்டு வருகிறேன். தற்சமயம் எண்ணூர் தி. மு. க. பிரச்சார செயலாளன்.

தாங்கள் அண்ணாவின் வரலாறுஎழுதிவருகையில்பழைய சம்பவங்களையும் எழுதி வருகிறீர்கள். படிக்கச் சுவையாக இருக்கிறது. அதோடு பெரியாரைப் பற்றி எனக்குத் தெரிந்த சிலவற்றையும் எழுதியுள்ளேன். இவைகளையும் வெளியிடுங்கள். நம் தோழர்களுக்கும், தி. க. தோழர்களுக்கும் நல்லது. நாட்டுக்கும் நல்லது!

நான் 1949-ல் பொன்மலை திராவிட வாலிபர் கழகத்தில் பராங்குசம் முயற்சியால் செயலாளனாக்கப்பட்டேன். அப்பொழுது ஒரு தடவை கருணாநிதியை வைத்துக் கூட்டம் நடத்தினோம். அடுத்த மாதம் பெரியாரைப் போய்க் கூப்பிட்டோம், அதற்கு அவர் சொன்னார் 'கண்டவனை வச்சுக் கூட்டம் போடறது இப்போ என்னை ஏன் கூப்பிடுறீங்க, அவனையே வச்சு நடத்துங்க' என்றார்.

சாதியை ஒழிக்கப் போராடும் வீரர் என்ற பட்டம், ஆனால் பொன்மலையில் எப்பொழுது எந்த நிகழ்ச்சிக்கு வந்தாலும் சாப்பிடாமல் போகமாட்டார். ஆனால் பெரிய சாதிக்காரர்களாக இருக்க வேண்டும். ஒருசமயம் தாழ்த்தப்பட்ட தோழர் ஒருவர் ஓர்க்ஷாப்பில் பணியாற்றிக்கொண்டு எல்லா சாதிக்காரர்களோடும் காலனியில் நாகரிகமாக வாழும் தி.க. கமிட்டி மெம்பர் அவர் மகள் திருமணத்தில் பேசிவிட்டுப் போய்விட்டார் சாப்பிடாமல்.

அடுத்து ஒரு நிகழ்ச்சி! அண்ணா அவர்கள் அண்ணன் அழகிரி இறந்தவுடன் அழகிரி குடும்பத்தாருக்கு நிதி திரட்டினார், பெரியார் எதிர்ப்புக்கிடையே. அந்த நிதியில் கலைவாணர் பங்கு பெரிது. அந்த நிதியை அம்மையாரிடம் கொடுத்தார் அண்ணா. அதைப் பெற்றுக்கொண்ட அம்மையார் அண்ணா பங்கு கொடுத்தார், அய்யாவிடம் பங்கு பெறலாம் என்று சென்றார். அய்யாவோ, என்னாங்க நிதி கொடுத்தாங்களாயில்லை, அதிலே நிலம் மீட்டது போக மீதி இருக்கா' என்றாராம்! இதைக்கேட்ட அம்மையாருக்கு எப்படி யிருக்கும்? பேசாமல் திரும்பிவிட்டார்.

அண்ணன் அழகிரி சாகக்கிடக்கிறார் தஞ்சையில். அப்பொழுது அய்யாவிடம் நிலைமையைத் தெரிவித்து உதவி கோரினார்கள். அதைக் கேட்ட அய்யா 'கட்சியிலே ஒவ்வொருத்தன் சாவான், சீக்காக் கிடப்பான் அவனுக்கு எல்லாம் பணம் கொடுத்தா கட்சி திவாலாக வேண்டியதுதான்' என்று மறுத்துவிட்டார். பிறகு அண்ணா அவர்கள் அழகிரிக்கு 100 ரூபாய் மணியார்டர் செய்துவிட்டு அந்தரசீதை தனக்கு அனுப்பினால் தான் வந்து (சொந்தச் செலவில்) பேசுவதாகச் சொன்னார்கள். அதனால் ஒரே நாளில் பல கூட்டங்களில் பேச வேண்டிய நிலை ஏற்பட்டது. பெரியார் சொன்னதையும், அண்ணா செய்ததையும் கேள்விப்பட்ட அழகிரி அவர்கள் எங்களிடம் கண்ணீர் விட்டுச் சொன்னார். 'நான் அண்ணாத்துரையை என்னமோ எண்ணிக் கொண்டிருந்தேன். தங்கமான குணம். உண்மைத்தலைவனுக்கு இருக்கவேண்டியபண்பு அப்படியே இருக்கிறது. யாராலும் என்னைக் காப்பாற்ற முடியாது. ஆனால் அண்ணாவின் செயல் இன்று சாகவேண்டியவனை இன்னும் 10 நாள் வாழவைத்துள்ளது' என்றார்.

ஒருதடவை தி. போ. வேதாசலம் பெயரால் ஒரு அறிக்கை வந்தது விடுதலையில். அதாவது பெரியார் கூட்டத்திற்கு வந்தால் மேடைக்கு அருகிலேயே வேன் நிற்க ஏற்பாடு செய்ய வேண்டும். சாப்பாடு மணியே சமைத்துக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். பெரியார் உட்கார்ந்து பேச நாற்காலி வசதி செய்யவேண்டும்.' இன்னும் பல- இதைப் பற்றி வேதாசலத்தைக் கேட்டோம். அதற்கு அவர் 'அய்யோ, அப்படி நான் ஒன்றும் பத்திரிகையில் வெளியிடவில்லையே எனக்குத் தெரியாமல் பெரியார் தானே என் பெயரால் வெளியிட்டிருக்கிறார்' என்றார்- இன்னும் எவ்வளவோ!

ஜி. வி. கோபால், எண்ணூர்

கேள்வி பதில்

கேள்: மதுரை காங்கிரஸ் மாநாட்டில் கிடைத்த 'மிச்சம்' அறிவிக்கப்பட்டதா? அப்படியானுல் எவ்வளவு?

எஸ். கமலத் தியாகராசன்,
திருவாரூர்

பதில்: மிச்சம் அறிவிக்கப்பட்டதோ இல்லேயோ எனக்குத் தெரியாது. பத்திரிகைகளேப் பார்க்கும்போது காங்கிரஸ்கட்சிக்குக் கிடைத்தமிச்சத்தைவிட டி. வி. எஸ். கம்பெனிக்குக் கிடைத்த மிச்சம்தான் அதிகம் என்பது தெரிகிறது! அதாவது விளம்பரம்தான்!

* * *

கே: 'ஆனந்தவிகடன்' நடத்திய பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்ட நிதியமைச்சர் சுப்பிரமணியம் அரசியல் துறையில் ஆனந்தவிகடன் கூடச் சற்று வழிதவறிப் போவது வருந்தத் தக்கது என்றுகூறி, (மதுரையில் நடந்ததி. மு. க. மாநாடுபற்றி ஆனந்தவிகடன் சிறப்பாக எழுதியிருந்ததை மறைமுகமாகக் கண்டித்தாராமே! அது உண்மையா?

அ. மாசிலாமணி
சாட்டியக்குடி

ப: விழாவுக்குச் சென்றவர்கள் அப்படித்தான் சொன்னுர்கள். அமைச்சரின் கோபத்துக்கு ஆளாகிவிட்ட 'பாவ'த்துக்குப் பிராயச்சித்தம் தேடத்தான் 'ஆனந்தவிகடன்' வாசன் மதுரைக் காங்கிரஸ் மாநாட்டு அலங்காரப் பொறுப்பு முழுவதையும் தமது 'ஜெமினி' ஸ்டுடியோ மூலம் செய்து முடித்து கொடுத்து விட்டாரே!

* * *

கே! சென்னையில் காமராசருக்குச் சிலே திறக்கப்பட்டதாமே! வ. உ. சி, திருப்பூர் குமரன், திரு. வி, க. போன்ற மறைந்த தியாகிகளுக்குச் சிலே இல்லேயா?

வி. பக்கிரிசாமி
விளுந்தமாவடி

ப; காமராசர் சிலேயைத் திறந்து வைத்த நேருவே தமது உரையில் உயிருடன் இருப்பவர்கட்கு சிலே வைப்பதை மறைமுகமாக கண்டித்திருக்கிருரே, கவனிக்கவில்லேயா?

* * *

கே: 'சம்பத் மீண்டும் அரசியல் குப்பையில் போய்விழாமல் காரியம் செய்தால்என்னுடைய ஆதரவு இருக்கும்; அப்பன் வேலேயை மகன் எடுத்துக் கொண்டான் என்ற பெருமை இருக்கும்' என்று பெரியார் ஈ. வெ. ரா, சம்பத் கட்சி மாநாட்டில் பேசுகையில் கூறினுரே அப்படியானுல் இனி சம்பத் அரசியலில் இருக்கமாட்டாரா? தேர்தலில் அவர் கட்சி ஈடுபடாதா?

வில்லாளன்,
புலியூர்

ப: யார் சொன்னது அவர் அரசியலில் ஈடுபடமாட்டார் என்று! அரசியலில் இல்லேயேல் அவர் ஏது? அவர் கட்சி ஏது? 15 பேரைத் தேர்தலில் நிறுத்தப் போவதாகக்கூடசம்பத்சொல்லியிருக்கிருரே! சொத்துக்குத் 'தந்தை' பக்கம்; 'சுகத்துக்கு அரசியல் பக்கம். இதுதான் அவர் கொள்கை!

சிலப்பதிகாரம்
நாட்டிய நாடகம்
அரங்கேற்று விழா

அன்புடையீர்!

தமிழகத்தின் தலேயாய காப்பியமான சிலப்பதிகாரத்தை நாட்டிய நாடகமாக தயாரித்து 1961ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14ம் நாள் சனிக்கிழமை மாலே 6-35 மணிக்கு,

டாக்டர் அ. சிதம்பரநாதன் எம்· ஏ., பிஎச். டி., எம்.எல்.சி.
(சென்னே பல்கலேக் கழகம்) அவர்கள் தலேமையிலும்
சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம்
அவர்கள் முன்னிலேயிலும்

சென்னே மைலாப்பூர், ஆலிவர் சாலேயில் அமைந்திருக்கும் மைலாப்பூர் பைன்ஆர்ட்ஸ் கிளப் அரங்கத்தில் நடததவிருப்பதால் தாங்கள் வருகைதந்து சிறப்பிக்குமாறு கோருகிறேன். வணக்கம்

நாட்டியகலாலயம்
சென்னே-4.
6—10—1961

தங்கள்
கே. என். தண்டாயுதபாணிபிள்ளே.
பரத நாட்டிய வித்வான்.

கொலே, கொலே!

(பாசுமணி)

"கொலே! கொலே" என்று கூவினுள் வேலேக்காரி பொன்னம்மா.

அக்கம்பக்கத்தார் ஓடிவந்தனர். போலீசிற்கும் போன் பறந்தது. கொலேயாளி சிரித்துக்கொண்டே ரத்தம் தோய்ந்த கட்டாரியுடன் நின்றுகொண்டு இருந்தான்.

முண்டமாகக் கிடந்தான் கொலே செய்யப்பட்ட கோபு.

கொலே செய்த கோவிந்தனேப் பக்குவமாகப் பக்கத்து வீட்டார் பிடித்தனர்.

"தலே எங்கே?" என்றனர்.

'பீரோவில் வைத்துப் பூட்டிவிட்டேன்" என்ருன் கோவிந்தன்.

போலீஸ் வந்தது. கோவிந்தனுக்கு காப்பிட்டு அழைத்துச் சென்றனர்.

* * *

"பாவி, பழகியதைக்கூட மறந்து எப்படித்தான் தன் நண்பனேக் கொன்ருனே?"

"கல்நெஞ்சன்! கோபு அவனுக்காக எப்படிப் பாடுபட்டிருக்கிருன் தெரியுமா?"

"தூங்கிக்கொண்டிருக்கும் போது இந்த துன்மார்க்கன் வெட்டிவிட்டானே"

"வெட்டிய தலேயை ஏனய்யா பீரோவில் வைத்துப் பூட்டினுன்"

"யாருக்குத் தெரியும்?"

"பாவம் கோபு..."

"துரோகி கோவிந்தன்"

இப்படி ஊரிலே பேச்சு அடிபட்டு வந்தது. கொலே செய்த கோவிந்தன் மேல் குற்றப் பத்திரிக்கைத் தாக்கலாயிற்று. போலீஸ் ஸ்டேஷனில் சதா சிரித்துக்கொண்டும் சீட்டி அடித்துக்கொண்டும் ஜாலியாக இருக்கிருன் கோவிந்தன். குற்றத்தை ஒப்புக்கொள்கிருன். கொலே செய்துவிட்டோமே என்ற திகிலோ—நண்பனே முண்டமாக்கிவிடடோமே என்ற அதிர்ச்சியோ அவனிடம் இல்லே.

* * *

கோர்ட், கும்பல்கூடி நின்றது. குற்றவாளிக் கூண்டிலே கோவிந்தன் புன்னகையோடு நிற்கிருன்.

சர்க்கார் தரப்பு வக்கீல் குற்றவாளியே குற்றத்தை ஒப்புக் கொண்டிருக்கிருன் என்று தனது கட்சிக்குச் சாதகமான வாதங்களே எல்லாம் நீதிபதி அவர்களுக்கு விளக்கிச் சொன்னுர். குற்றப்பத்திரிக்கை வாசிக்கப்பட்டது.

இவைகளேயெல்லாம் கேட்ட நீதிபதி குற்றவாளியைப் பார்த்து:

"உன் நண்பனுடைய தலேயை நீ வெட்டினுயே, எதற்காக அதை எடுத்து பீரோவில் வைத்துப் பூட்டினுய்?" என்று கேட்டார்.

வாய்விட்டு சிரித்தான் கொலேயாளி. பின்:

"பெரிய நீதிபதிக்கு இதுகூடத் தெரியவில்லே! அவன் தலேயை பீரோவில் வைத்துப் பூட்டிவிட்டால், தூங்கி, எழுந்ததும் என் நண்பன் தலேயை காணவில்லே என்று தேடட்டுமே" என்றுதான் அப்படிச் செய்தேன் என்ருன் அந்த முற்றிப்போன பைத்தியம்.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், 12- 3. வது குறுக்குத்தெரு ,டெஸ்ட்புரம்,சென்னே 24.
அச்சிட்டோர் எம். பி. சத்தியமூர்த்தி முல்லே அச்சகம் 3-40 மவுண்ட்ரோடு சென்னே-6